# போலீஸ் பார்வை

**POLICE PARVAI**

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாதும்

• மலர்-10 • Volume-10 • இதழ்-2 • Issue-2 • டிசம்பர்-2024 • December -2024 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com


## வரம்பு மிகுந்த கந்து வட்டி தடுப்புச் சட்டம் 2003



## இயற்கையை நாம் அழித்தால் இயற்கை நம்மை அழித்து விடும்

சங்கத்தமிழ் நூல்களை நமக்கு மீட்டுத் தந்த பனை மரம்

## விபத்தில் உயிரிழந்த காவலர் குடும்பத்துக்கு காக்கும் உறவுகள் காவலர் குழுமம் சார்பாக நிதி உதவி

2017 பேட்ச் காவலர்கள் சார்பாக SP Dr.A.பிரதீப் IPS அவர்கள் வழங்கினார்



பனை பொருட்கள்; அதன் பயன்பாடுகள்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...

பண மழை பெய்யும் 5 ராசிகள்


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

# போலீஸ் பார்வை

டிசம்பர் 2024 மலர் 10 இதழ் 2

**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L. S.ரவிச்சந்திரன் M.A., B.L.

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., L.L.B.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜஹா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம்

**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise,**
**No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099.**
**Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com,**
**Website.www.policeparvai.com**

All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by Queen Bee CREATIVE





# இயற்கையை நாம் அழித்தால் இயற்கை நம்மை அழித்து விடும்

தமிழ்நாட்டில் ஒவ்வொரு முறையும் புயல் கனமழையால் எங்கு பார்த்தாலும் வெள்ளக்காரடாக காட்சியளிக்கும் சூழல் உருவாகியுள்ளது. முறையான வடிகால் வசதி இல்லாமல் மழை நீர் ஏரி குளம் ஆறுகளில் சென்றடையாமல் விவசாய நிலங்கள் சாலைகள் குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்து விவசாய நிலங்கள் விளைச்சல்கள் வீணாகி சாலைகளில் போக்குவரத்து பாதிப்புகள் ஏற்பட்டு குடியிருப்பு பகுதிகளில் வீட்டுக்குள் மழை வெள்ளம் சூழ்ந்து மக்கள் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் அவல நிலை உள்ளது. இந்த வெள்ள பாதிப்புகள் ஏற்படாமல் மக்கள் பாதுகாப்புடன் வாழ தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஆக்கிரமிக்கப்பட்ட ஏரி, குளங்கள் மற்றும் ஆற்றங்கரைகள் ஆகியவற்றில் அரசு இயந்திரம் இரும்பு கரம் கொண்டு பாரபட்சம் இன்றி ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

ஏரி குளங்களை தூர்வாரி ஆற்றங்கரைகளை பலப்படுத்தி உடைப்புகள் ஏற்படாமல் முறையாக பராமரித்து புயல் மழை வந்தாலும், வெள்ள பாதிப்புகள் ஏற்படாமல் முறையாக திட்டமிட்டு வடிகால் வழிகளை ஏற்படுத்தி, வெள்ளம் ஏரிகளுக்கும், குளங்களுக்கும், ஆற்றுக்கும், சென்றடையும்படி அரசும் மாவட்ட நிர்வாகமும் தீவிரமாக கவனம் செலுத்தி திட்டமிட்டு செயல்பட்டால் மக்கள் வெள்ள பாதிப்பினால் அவதிப்படாமல் நிரந்தர தீர்வு காண முடியும் என்பது தான் நிஜம்.

அதை தவிர்த்து ஒவ்வொரு முறை மழை வெள்ள பாதிப்புகள் ஏற்படும் போது தற்காலிக நிவாரண உதவிகளை மக்களுக்கு அளித்து எந்த பயனும் இல்லை. மக்கள் வெள்ள பாதிப்பால் வாழ்வாதாரம் பாதிப்படைவதற்கு நிரந்தர தீர்வும் அது இல்லை.

அரசும் மாவட்ட நிர்வாகமும் மக்கள் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் படி திட்டமிட்டு தீவிரமாக பாரபட்சமின்றி யாராக இருந்தாலும் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு இயந்திரம் இரும்பு கரம் கொண்டு செயல்பட்டு ஆக்கிரமிப்புகளை அகற்றி முறையாக ஏரி, குளங்கள் மற்றும் ஆற்றங்கரைகளை பராமரித்து, மழை, வெள்ளம் சாலைகளிலும் விவசாய நிலங்களிலும் குடியிருப்பு பகுதிகளிலும் சூழாமல் வடிகால் வசதி ஏற்படுத்தி மக்கள் பாதிப்படையாமல் காக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையாக உள்ளது.

**ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.



## அரியலூர் மாவட்ட இணையவழி குற்றப்பிரிவு காவல்துறையினர்

# அரசு தொழிற்பயிற்சி கல்வி நிலையத்தில் விழிப்புணர்வு

தமிழ்நாடு இணையக் குற்ற பிரிவு கூடுதல் காவல்துறை இயக்குநர் ADGP திரு.சந்தீப் மிட்டல் IPS., அவர்களின் உத்தரவின்படியும், திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் IG திரு.G.கார்த்திகேயன் IPS., மற்றும் திருச்சி சரக காவல்துறை துணை தலைவர் DIG திரு.மனோகர் IPS., அவர்களின் அறிவுரையின்படியும், சென்னை இணையக் குற்றப்பிரிவு காவல் கண்காணிப்பாளர் திரு.ஈஸ்வரன் மற்றும் அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ச.செல்வராஜ் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், அரியலூர் மாவட்ட இணையவழி குற்றப்பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பொறுப்பு) திரு.விஜய ராகவன் அவர்களின் தலைமையில், அரியலூர் அரசு தொழிற்பயிற்சி மையத்தில் 03.12.2024 அன்று நடைபெற்றது.

இதில் அரியலூர் மாவட்ட இணையவழி குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.கவிதா அவர்கள் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.மணிகண்டன் அவர்கள் 500க்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சி பயிலும் மாணவ மாணவிகளுக்கு இணையவழி குற்றங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

மேலும் பெருகிவரும் சைபர் குற்றங்களான டிஜிட்டல் கைது மோசடி (தங்களை காவல்துறையினர் Digital arrest செய்து இருப்பதாக கூறி பணம் பறித்தல்), TASK மோசடி (டாஸ்க் செய்தால் அதிக பணம் தருவதாக கூறி), online trading மோசடி, online investments மோசடி (சிறிய தொகை முதலீடு செய்தால் அதிக லாபம் பெறலாம் என்று கூறி), OTP மோசடி, KYC Update மோசடி, ஏதேனும் அரசு திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற பணம் செலுத்த வேண்டும் என்று கூறி மற்றும் பெண்களுக்கு எதிரான சமூகவலைதள குற்றங்கள் பற்றியும் அந்த குற்றங்களிலும் தற்காத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் இணையவழி மூலம் பணம் இழந்தால், உடனடியாக புகாரை பதிவு செய்ய அழைக்க வேண்டிய உதவி எண் 1930 மற்றும் இணையதளம் www.cybercrime.gov.in குறித்து விளக்கமளித்து, அவர்களுக்கு இணையவழி குற்றப்பிரிவு சம்பந்தமான துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் அரியலூர் அரசு தொழிற்பயிற்சி மாணவ மாணவிகள், முதல்வர் திரு.நாகராஜன், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிருபர்: R.தங்கபாண்டியன், அரியலூர்

# தேவகோட்டையில் வீட்டில் நகை திருடிய கொள்ளையர்கள் கைது

## தேவகோட்டை காவல்துறையினர் அதிரடி

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தில்லை நகர் 6-வது வீதியைச் சேர்ந்த ஞானசேகர், த/பெ.ராயர்; தில்லை நகர் 6-வது வீதி, தேவகோட்டை, என்பவரின்; வீட்டில் 20.11.2024-ம் தேதி அன்று அடையாளம் தெரியாத நபர்கள் வீட்டை உடைத்து வீட்டில் இருந்த நகைகளை திருடிச் சென்று விட்டதாக ஞானசேகர் என்பவர் 20.11.2024-ம் தேதி அளித்த புகாரின் பேரில் தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் குற்ற எண்:212/24, U/s 331(3), 305(A) BNS- ன் படி வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டோங்கரே பிரவீன் உமேஷ், IPS., அவர்களின் உத்தரவின் பேரில், தேவகோட்டை உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் DSP திரு.பார்த்திபன், அவர்கள் மேற்பார்வையில், காரைக்குடி வடக்கு குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.பிரேம் ஆனந்த், தேவகோட்டை நகர் காவல் ஆய்வாளர் திரு. கணேசமூர்த்தி, மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. இளையராஜா, சார்பு ஆய்வாளர் திரு.சரவணக்குமார், சார்பு ஆய்வாளர் திரு.வினோத், சார்பு ஆய்வாளர் திரு. நமச்சிவாயம் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. உதயக்குமார் ஆகியோர்கள் தலைமையிலான தனிப்படையினர் விரல் ரேகை மற்றும் CCTV காட்சிகள் தொழில் நுட்ப உதவியுடன்; எதிரிகளை தேடிவந்தனர்.

CCTV காட்சிகள் மூலம் எதிரிகள் அடையாளம் காணப்பட்டு இச்சம்பவத்தில் ஈடுபட்ட திருச்சி மாவட்டம், வாழவந்தான்கோட்டையைச் சேர்ந்த 1.நாகராஜ் (எ) பூனை நாகராஜ், திருச்சி மாவட்டம், நாகமங்கலத்தைச் சேர்ந்த 2.பொன்ராஜ் (எ) ராஜா (எ) அழகு, ஆகியோர்கள் அடையாளம் கண்டு தேவகோட்டை நகர் காவல் ஆய்வாளர் அவர்களால் கைது செய்யப்பட்டு அவர்கள் கொடுத்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் குற்றவாளிகளிடமிருந்து 91 பவுன் தங்க நகைகள் கைப்பற்றபட்டது.

குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். இவ்வழக்கில் சிறப்பாக செயல்பட்ட தேவகோட்டை உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.பார்த்திபன், அவர்கள் மற்றும் அவரது அணியினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பாராட்டி, சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கியுள்ளார்கள்.

மேலும் இதுபோன்ற குற்றச்சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்டப்படியான கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டோங்கரே பிரவீன் உமேஷ், IPS., அவர்கள் எச்சரித்துள்ளார்.

நிருபர்: சிவகுருநாதன், சிவகங்கை









# பல் வலி குணமாக சித்த மருத்துவ குறிப்புகள்

நோய் நொடியின்றி 'பல்லாண்டு' வாழ 'பல்' பாதுகாப்பு அவசியம். மனிதர்களுக்கு ஏற்படும் வலிகளில் மிகவும் மிக முக்கியமான வலி என்றால் அது பல் வலிதான். பொதுவாக இதை சித்தர்கள் "தந்த நோய்" என்று அழைக்கின்றனர். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்பதை எப்பொழுது நாம் மறந்தோமோ, அப்பொழுதே பல் சம்மந்தமான பிரச்சனைகள் நம்மில் ஆட்கொள்ள ஆரம்பித்துவிட்டன. பழங்காலத்தில் நம் முன்னோர்கள் ஆலம் கருவேல குச்சி, வேப்பங்குச்சி, உப்பு போன்றவற்றைக் கொண்டுதான் பல் துலக்கினார்கள்.

கருவேல மரக்குச்சியில் பல் துலக்கினால், பற்கள் மட்டுமல்ல ஈறுகளும் சேர்ந்து திடமாகும்; வேப்ப மரத்தின் குச்சியைக் கொண்டு பல் துலக்கினால், பற்கள் தூய்மையாகும்; நீர் புலா மரக்குச்சியால் பல் துலக்கினால், ஆண்மை விருத்தியாகும்; நாயுருவி வேரால் பல் துலக்கினால், பற்பசைகளில் வரும் நுரைகளைப்போல அதிக அளவு நுரை வரும். இந்த நுரை பல் அழுக்குகளைப் போக்கி, பற்களை அழகாக்குவதுடன் முகத்தில் வசீகரத்தையும் உண்டாக்கும். ஆனால் தற்போது நாம் பல கெமிக்கல்கள் கலக்கப்பட்ட வித விதமான பற்பசைகளை உபயோகிப்பதால் நம் பற்கள் ஆரோக்கியமாக இருக்கின்றன என்று நாம் கருதிக்கொண்டிருக்கின்றோம்..

பல் வலி வந்தால் போதும் தாங்க முடியாத வலி எடுக்கும். இதனால் நம் அன்றாட வேலைகளைக் கூட நம்மால் சரியாக செய்ய இயலாது. இதற்கு அடிக்கடி வலி நிவாரணி மாத்திரைகளையும் எடுத்து வர முடியாது. ஏனென்றால் அதிகப்படியான மாத்திரைகளால் நமக்கு பக்க விளைவுகள் உண்டாக வாய்ப்புள்ளது. பற்கள் இருக்கும் இடம் தாண்டி, நரம்புகளில் வீக்கம், முகம் முழுக்க வலி தாடையில் வலி என்று ஒவ்வொரு இடமாக பரவக்கூடும்.

**பல் வலி காரணங்கள் என்ன?**

பல் வலி என்பது பற்களின் பகுதியில் அல்லது சுற்றியுள்ள ஈறுகளில், வாய்க்குள் ஏற்படும் அசவுகரியத்தின் அறிகுறியாகும். பல் ஈறில் நீர் தேங்கி ரோகம் விளைவிப்பதே பல் நோய்கள். பற்களின் மீதுள்ள உணவுத் துணுக்குகளோடு உமிழ்நீரிலுள்ள பாஸ்பரஸ் சேர்ந்து பற்காரை(Cavity) உண்டாகிறது.

பல் வலி, ஈறு வீக்கம், பல் கூச்சம், பல் பலமிழந்து ஆடுதல், கடினமான பொருட்களை மென்று சாப்பிட முடியாமை, பல்லடிச் சீழ் போன்றவை பல் வலி, சொத்தைப் பல் வலி ஏற்படுவதற்கான அறிகுறிகள் ஆகும். வாயில் ஏற்படும் தொற்று நோய்கள் மற்றும் உடலில் ஏற்படும் வேறு பல நோய்களின் காரணமாகவும் பல் வலி உருவாகலாம்.

பல் வலி எதனால் வருகிறது என்பதை தெரிந்து கொள்வது மிக முக்கியம். பல் சொத்தை என்றால் மருத்துவரை நாட வேண்டும். ஈறு மற்றும் நரம்பு பலவீனம் என்றால் வீட்டுலேயே குணப்படுத்தலாம்.

பல்வலி திடீரென்று ஏற்பட்டால் மருத்துவரிடம் செல்வதற்கு முன் பல் வலியை போக்க வீட்டில் உள்ள சில இயற்கை பொருட்கள் பல்வலியை குறைக்க உதவுகிறது. அவற்றில் உள்ள மருத்துவ குணங்கள் வலி நிவாரணியாக செயல்பட உதவுகிறது. 1/2 டீ ஸ்பூன் உப்பை எடுத்து ஒரு கிளாஸ் வெதுவெதுப்பான நீரில் கலந்து பற்களில் படும்படி கொப்பளியுங்கள். ஏனெனில் உப்புநீர் ஒரு சிறந்த கிருமி நாசினியாகும்.

இரண்டு சிறிய கிராம்புகளை எடுத்துக்கொண்டு அதை பல் வலி இருக்கும் இடத்தில் வைத்து சிறிது நேரம் நன்றாக கடித்து கொண்டிருந்தால் பல் வலி குணமாகும்.கிராம்பு எண்ணெய்யும் பல் வலி உள்ள இடத்தில தடவலாம். கிராம்பு எண்ணெய்யில் யூஜெனோல் உள்ளது. இது ஒரு இயற்கை ஆன்டி செப்டிக் ஆக செயல்படும்.

எலுமிச்சை தோலை பொடி செய்து அதனுட்ன் சிறிது

உப்பு கலந்து பாதிக்கப்பட்ட பல்லின் மேல் தடவுங்கள். சில நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். தினமும் இரு வேளை செய்து வந்தால் பல் வலி நீங்கும். கொய்யா இலையை காயவைத்து அதில் சிறிதளவு உப்பு சேர்த்து நன்றாக அரைத்து பொடியாக்க அதை கொண்டு பற்களை துலக்கினால் பல் வலி குறையும்.

வேப்பமர பட்டை வேப்ப மரப்பட்டையோடு ஆறு கிராம்பு சேர்த்து நீரில் போட்டு நன்றாக சாறு இறங்கும் வரை கொதிக்க வைக்க வேண்டும்.அந்த நீரை கொண்டு கொண்டு வாய் கொப்பளித்தால் பல் வலி குறையும். கால் டீ.ஸ்பூன் கல்லுப்பினை ஒரு டம்ளர் இளஞ்சூடான தண்ணீரில் கரைத்து கொள்ள வேண்டும்.காலை,மாலை மற்றும் இரவு என மூன்று நேரம் வாயை கொப்பளிக்க வேண்டும். இதனுடன் மஞ்சள் தூளும் சேர்த்து கொள்ளலாம். பல் வலி படி படியாக குறையும். கடுகு எண்ணெயில் சிறிதளவு உப்பு கலந்து பல் வலி இருக்கும் இடத்தில் தடவினால் பல் வலி நீங்கும்.

பச்சை வெங்காயத்தை கடித்து மென்று சாற்றை விழுங்க பல் வலி குறையும். பச்சை வெங்காயத்திலுள்ள காரத்தன்மையானது பல்லிலுள்ள கிருமிகளை அழிப்பது மட்டுமல்லாமல் பல் சொத்தையையும் தடுக்கும். சிலருக்கு பல்லில் உள்ள ஓட்டை காரணமாக பல் வலி ஏற்படும். அப்படி இருந்தால் அந்த இடத்தில் தேனை தடவி நிரப்ப வேண்டும். அதன் பிறகு வாய் கொப்பளிக்க வேண்டும். இப்படி செய்தால் கிருமிகள் அழியும். கடுக்காய்தூளுடன் சம அளவு உப்புத்தூள் கலந்து பல்துலக்கிவர பல்வலி குணமாகும். மாதுளம் பழத்தோடுடன் உப்பு கலந்து பல்துலக்க பல்வலி தீரும்.

மேற்கண்டவையெல்லாம் பல் வலிக்கான அவசர கால கைவைத்தியம். சாதாரணமாக பல் வலி வரும் போது இதை தொடர்ந்து கடைபிடித்தால் வலி பெருமளவு குறையும். அதிக சொத்தையும் வலியும் இருந்தால் மருத்துவரை அணுகுவதும் அவசியம்.

**பற்களை பாதுகாக்கும் முறை:**

காலை, இரவு என இருவேளையும் பல் துலக்குவது நல்லது. பல் துலக்குவதற்கு ஆலமரம், அரசு, வேம்பு மரங்களின் குச்சிகளை பயன்படுத்துவது சிறந்தது.

மாசிக்காய், லவங்கப்பட்டை, கடுக்காய்,





நெல்லிக்காய், தான்றிக்காய், மிளகு போன்றவற்றைப் பொடியாக்கிப் பல் துலக்கப் பயன்படுத்தலாம்.

கருவேலமரக் வேப்பங்கொழுந்து, கொழுந்து மற்றும் ஆவாரம்பூக்களையும் பல் துலக்கப் பயன்படுத்தலாம். சாப்பிட்ட பின்னர் வாயில் எஞ்சி இருக்கும் உணவுத் துகள்களே பாக்டீரியாக்கள் பெருகும் இடங்கள். எனவே, ஒவ்வொரு முறை சாப்பிட்டு முடித்ததும் வாயை நன்கு கொப்பளிக்க வேண்டும்.

பற்களால் நகத்தைக் கடித்தல், பென்சில் போன்ற பொருட்களைக் கடித்தல், குண்டூசி மற்றும் குச்சியால் பற்களைக் குத்துதல் போன்ற செயல்களைச் செய்யக் கூடாது. அதிக குளிர்ச்சியான அல்லது அதிக சூடான உணவுகளை உண்ண கூடாது. குழந்தைகளுக்கு சாக்லேட்டுகள், ஐஸ் கிரீம்கள் போன்றவற்றை தரக்கூடாது. அதிக சர்க்கரை கொண்ட உணவுகள் மற்றும் பானங்களைத் தவிர்க்கவும். புகையிலை மற்றும் மதுப் பழக்கம் ஈறுகளில் புற்றுநோயை ஏற்படுத்தும் சாத்தியம் இருப்பதால், அவற்றைத் தவிர்ப்பது பல் பாதுகாப்புக்கு உதவும்.

**ஆயில் புல்லிங்**

பல்வகையான நுண்ணுயிரி களுக்கும், கிருமிகளுக்கும் நமது வாய்தான் நாற்றங்காலாகி நமக்கு தீமை செய்கிறது நல்லெண்ணெய்யை இரண்டு தேக்கரண்டி வாயில் ஊற்றி சிறிது நேரம் அப்படியே வைத்திருந்து கொப்பளிக்கும் முறையைத்தான் ஆயில் புல்லிங் என்று கூறுகிறார்கள். இந்த எண்ணெய் கொப்பளிப்பு, அத்தகைய தீய, கொடிய கிருமிகளையும் நுண்ணுயிரிகளையும் அழித்து அதன் மூலமாக உடலில் நஞ்சு கலந்த வேதியியல் பொருட்களை வெளியேற்றுகிறது. இதனால் நமது உடலில் உள்ள ஒவ்வொரு அணுக்களும் புத்துணர்வு பெறுகிறது. பற்களை தூய்மையாக பாதுகாக்க மேற்கூறிய வழிமுறைகளை பின்பற்றினாலே போதுமானதாகும். அவ்வாறு செய்தால் பற்களின் நலம் மட்டுமின்றி உடலும் நல்ல ஆரோக்கியமானதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க நலமுடன்!!!

Dr.த.வெங்கடேஸ்வரா, (சித்த மருத்துவம், அம்பத்தூர், சென்னை.) செல்: 99410 29505






# திருச்சி பள்ளி மாணவர்களுக்கு போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சி மாநகரம் தெப்பக்குளம் பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளியில் போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பள்ளி உதவி தலைமை ஆசிரியர் வைலட் செல்வி தலைமையில் 12.11.24 நடைபெற்றது.

மாநகர காவல் துறை குழந்தை கடத்தல் தடுப்பு பிரிவு ஆய்வாளர் வசுமதி மாவட்ட குழந்தை நலக்குழு உறுப்பினர் முனைவர் பிரபு ஆகியோர் மாணவர்கள் போதைப்பொருள் பயன்படுத்துவதால் உடல் அளவிலான மன அளவிலான பாதிப்புகள் குறித்தும் சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகள் குற்றங்கள் மற்றும் கல்வியின் அவசியம் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு வழங்கினார்கள். பள்ளி அளவிலான போதைப் பொருள் தடுப்புக் குழு மூலமாக மாணவர்களுக்கு போதைப்பொருள் தடுப்பு சம்மந்தமான புகார் தகவல்கள் குறித்த புகார் பெட்டி வழங்கப்பட்டு போதைப் பொருளுக்கு எதிரான உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதுகலை ஆசிரியர் எபினேசர் வரவேற்றார் காவல் உதவி ஆய்வாளர் வனிதா நன்றி கூறினார். விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 4,000-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பெற்றனர்.

சிறப்பு நிருபர்: சே.மணிகண்டன், திருச்சி



## வருண முத்திரை

**பெருவிரலின் நுனியோடு சுண்டு விரலின் நுனியை சேர்க்கவும். ருசியின்மை அகலும், வறட்டு இருமல் அகலும், இரத்தசோகை, தோல்நோய் அகலும், இரத்தம் சுத்தமாகும். தினமும் 2, கைகளிலும் சம்மணகாலிட்டு அமர்ந்து 10 நிமிடம் செய்யவும்.**

**இரண்டு கைகளிலும் செய்க...**




செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438

# திண்டுக்கல் பாலியல் வன்கொடுமை வழக்கில் 3 நபர்களுக்கு சிறை தண்டனை

## காவல்துறையினருக்கு SP Dr.A.பிரதீப் IPS அவர்கள் பாராட்டு

போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட 3 நபர்களின் முதல் குற்றவாளிக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.1,55,000/- அபராதமும் இரண்டு மற்றும் மூன்றாம் குற்றவாளிகளுக்கு 22, ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.1,50,000/- அபராதமும் பெற்றுத்தந்த திண்டுக்கல் மாவட்ட காவல்துறையினர் SP பாராட்டு தெரிவித்தார்.

29.11.2024 திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2022-ஆம் ஆண்டு 14 வயது சிறுமியை காதலித்து திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த குஜிலியம்பாறை ஆலம்பட்டி பகுதியைச் சேர்ந்த பாண்டி(19) மற்றும் இவருக்கு உடந்தையாக இருந்த இவரது தந்தை சுப்பிரமணி(62) தாய் காளியம்மாள்(55) ஆகிய 3 நபர்களையும் குஜிலியம்பாறை காவல் நிலைய போலீசார் போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் திண்டுக்கல் மாவட்ட காவல்





கண்காணிப்பாளர் Dr.A.பிரதீப், IPS அவர்களின் அறிவுறுத்தலின்படி குஜிலியம்பாறை காவல் நிலைய ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள், நீதிமன்ற சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ரஞ்சித் அவர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர் திருமதி.மைதிலி அவர்களின் சீரிய முயற்சியால் (29.11.2024) திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் முதல் குற்றவாளியான பாண்டி என்பவருக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.1,55,000/- அபராதமும், இரண்டாம், மூன்றாம் குற்றவாளிகளான சுப்பிரமணி மற்றும் இவரது மனைவி காளியம்மாள் ஆகியோருக்கு 22 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.1,50,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்கள். மேலும் இந்தாண்டு இதுவரை 64 போக்சோ வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நிருபர்: குருசரவனண், திண்டுக்கல்.




# விபத்தில் உயிரிழந்த காவலர் குடும்பத்துக்கு காக்கும் உறவுகள் காவலர் குழுமம் சார்பாக நிதி உதவி

## 2017 பேட்ச் காவலர்கள் சார்பாக SP Dr.A.பிரதீப் IPS அவர்கள் வழங்கினார்

திண்டுக்கல் மாவட்டம் சீலப்பாடி பசும்பொன் நகரை சேர்ந்த S.விக்னேஷ்குமார் அவர்கள் திண்டுக்கல் மாவட்ட ஆயுதப்படையில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தார்.

கடந்த 11.05.2024-ம் தேதி பணி முடித்துவிட்டு திருச்சி ரோடு தாமரைப்பாடி அருகே இருசக்கர வாகனத்தில் வந்தபோது எதிரே வந்த வாகனம் மோதி பலத்த காயம் ஏற்பட்டு உயிரிழந்தார்.

இதன் காரணமாக தமிழ்நாடு காவல்துறை 2017 பேட்ச் காவலர்கள் 38 மாவட்டங்களில் காக்கும் உறவுகள் குழு என்ற பெயரில் 6587,காவலர்கள் ஒன்றிணைந்து S.விக்னேஷ் குமார் குடும்பத்தாருக்கு 21,69,900 ரூபாய் பணம் வசூலித்து மனைவி, குழந்தை, தந்தை, சகோதரி என வங்கி வைப்பு தொகையாக செலுத்தி அதற்கான வங்கி கணக்கு புத்தகத்தை திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.A.பிரதீப் IPS அவர்கள் முன்னிலையில் (22.11.2024)-ம் தேதி ஒப்படைத்தனர். மேலும் அவர் நினைவாக தென்னக்கன்றுகள் வழங்கப் பட்டது.

நிருபர்: குருசரவணன், திண்டுக்கல்.





# மதுரை BLOODDONOR'SCLUB சார்பாக விழிப்புணர்வு மாரத்தான்

## மதுரை மாநகர காவல் ஆணையர் J.லோகநாதன் IPS அவர்கள் கொடியசைத்து தொடக்கி வைத்தார்


மதுரை மாநகரில் (24.11.2024) மதுரை மருத்துவக் கல்லூரி BLOOD DONOR'S CLUB சார்பாக, உதிரம்'2024 என்கிற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 8.7 கிலோமீட்டர் இரத்ததான விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை மதுரை மாநகர காவல்ஆணையர்.J.லோகநாதன் IPS. அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்ததுடன் அதில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்வதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாநகர காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) அவர்கள், மற்றும் காவல்துறை அதிகாரிகள், மருத்துவக்கல்லூரி ஆசியர்கள் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் இரத்ததான தன்னார்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் மாநகர காவல் ஆணையர் அவர்களால் போட்டியில் வெற்றி பெற்ற நபர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை






## தான்தோன்றிமலை பகுதியில் மெடிக்கலில் இருந்த பெண்ணிடம் செயினை பறிக்க முயன்ற வழிபறி திருடர்கள் கைது

# அதிரடியாக செயல்பட்ட தனிப்படையினருக்கு கரூர் SP திரு.பைரோஸ்கான் அப்துல்லா பாராட்டு

கரூர் மாவட்டம் பசுபதிபாளையம் வட்டம் தான்தோன்றிமலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மெடிக்கலில் கடந்த 21-11-24 தேதி இரவு நேரத்தில் தனியாக இருந்த பெண்ணிடம் வழிப்பறி திருடர்கள் செயினை பறிக்க முயற்சி செய்தனர்.

அந்த திருடர்களை பிடிக்க தகவலின் பெயரில் கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பைரோஸ்கான் அப்துல்லா அவர்களின் உத்தரவின் பெயரில் கரூர் நகர DSP திரு.செல்வராஜ் அவர்களின் அறிவுரைப்படி பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் திரு.முத்துக்குமார் அவர்களின் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

தனிப்படையினர் சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, வழிபறி குற்றவாளிகளை பற்றி தீவிர விசாரணை செய்து வந்தனர். அதன்படி, வழிபறி குற்றவாளிகள் 1,ரஞ்சித் குமார் மற்றும் 2,சக்திவேல் ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொண்டதில் இருவரும் தொடர் வழிப்பறி திருட்டில் ஈடுபட்டதும் மேலும் தற்சமயம் மெடிக்கல் கடையில் பெண்ணிடம் செயினை பறிக்க முயன்றதும் தெரியவந்தது.

இரண்டு பேர் மீதும் வழக்கு பதிவு செய்த போலீஸார் தீவிர விசாரணை செய்ய முயன்றபோது, காவல் துறையினரிடமிருந்து அவர்கள் தப்பித்து செல்ல முயன்றனர். அப்போது, அவர்கள் தப்பிச் செல்ல முயன்ற இருசக்கர வாகனம் பாலத்தில் மோதி இருவரும் கீழே விழுந்தனர். இதில் குற்றவாளி



ரஞ்சித்குமாருக்கு கையில் எலும்பு முறிவும், மற்றொரு குற்றவாளி சக்திவேலுக்கு காலில் எலும்பு முறிவும் ஏற்பட்டது. அவர்களை மீட்ட போலீஸார் சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்த திருட்டு தகவலின் பெயரில் தீவிர விசாரணை மேற்கொண்டு வழிபறி திருடர்களை கைது செய்த பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் திரு.முத்துக்குமார் அவர்களின் தலைமையிலான காவல் குழுவினரை கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பைரோஸ் கான் அப்துல்லா அவர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நிருபர்: N.நபிமுகம்மது, கரூர்

# ஆலங்குளம் காவல் நிலையத்தில்

# SP V.R.ஸ்ரீனிவாசன் அவர்கள் ஆய்வு

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் காவல் நிலையத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.V.R.ஸ்ரீனிவாசன் அவர்கள் ஆய்வினை மேற்கொண்டார்.

இதில் காவல் நிலையத்தின் முக்கிய கோப்புகள் மற்றும் ஆயுதம் வைப்பறை ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார். பின்னர் பொதுமக்களிடம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் பணியின் போது காவல்துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்தும் அறிவுரைகள் வழங்கினார். மேலும் காவல் நிலைய CCTNSல் சிறப்பாக பணிபுரிந்து வந்த பெண் தலைமை காவலர் திருமதி.ஸ்ரீஜா ராணி அவர்களை பாராட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுமதி வழங்கினார். இயற்கை வளங்களை பாதுகாக்கும் விதமாக ஆலங்குளம் காவல் நிலைய வளாகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மற்றும் காவல் துறையினர் இணைந்து மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.









# இருசக்கர வாகன EAGLEPATROL ரோந்தை தொடங்கிய திருநெல்வேலி சரக DIG Dr.மூர்த்தி IPS அவர்கள்

கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப்படையில் திருநெல்வேலி சரக DIG Dr.மூர்த்தி IPS அவர்கள் காவல்துறையில் EAGLE PATROL இருசக்கர வாகன ரோந்து பணியை தொடங்கி வைத்தார்கள். முதற்கட்டமாக எட்டு வாகனங்கள் கோட்டார், வடசேரி, நேசமணி நகர், தக்கலை, குளச்சல் கன்னியாகுமரி, மார்த்தாண்டம் பகுதிகளுக்கு தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த EAGLE PATROL ரோந்து காவலர்கள் காலை 6 மணி முதல் மதியம் 2 மணி வரையும் மதியம் 2 மணி முதல் இரவு 10:00 மணி வரையும் சுழற்சி முறையில் நகர பகுதிகளில் பொதுமக்கள் பாதுகாப்பிற்காக மக்கள் அதிகம் கூடும் இடங்களில் ரோந்து மேற்கொள்வார்கள்.GPS பொருத்தப்பட்ட இந்த EAGLE PATROL வாகனங்கள் மாவட்ட காவல் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை மூலம் கண்காணிக்கப்படும்.

இந்நிகழ்வின் போது கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.E.சுந்தரவதனம் IPS அவர்கள் உடனிருந்தார்கள்.

நிருபர்: J.ஜெயவேல் முருகன், கன்னியாகுமரி





**மீட்டு வரும் காட்சி**

கடலூர் மாவட்டம் பகண்டை கிராமத்தில் வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை காவல்துறை மீட்பு குழுவினர் படகுகள் மூலம் பத்திரமாக மீட்டு வருகிறார்கள்.

சிறப்பு நிருபர்: P.முத்துக்குமரன், கடலூர்.



***நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று***
***பண்பின் தலைப்பிரியாச் சொல்.*** *குறள் 97: இனியவை கூறல்*

*பிறர்க்கு நன்மையைத் தந்து, இனிய பண்பிலிருந்து விலகாத சொல், இம்மைக்கு உலகத்தாரோடு ஒற்றுமையையும், மறுமைக்கு அறத்தையும் கொடுக்கும்.*

# விடுதலை போராட்ட வீராங்கனை வை.மு.கோதைநாயகி



1. விடுதலைப் போராட்ட வீராங்கனை, பிரபல நாவலாசிரியை – வை.மு.கோதைநாயகி பிறந்த தினம். (01.12.1901)

2. இவர் சிறுவயதிலேயே தாயை இழந்தார். நாலடியார், தேவாரம், திருவாசகம், கம்பராமாயணம், திருவாய்மொழி உள்ளிட்ட தமிழ் இலக்கியங்களைக் கற்று, குழந்தைகளும் பெரியவர்களும் ரசிக்கும் வகையில் கதைசொல்லும் திறன் பெற்றிருந்தார்.

3. இதைக் கண்ட கணவர், மனைவியின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அவற்றைப் பார்த்து, இவர் எழுதிய முதல் நாடக நூல் ‘இந்திர மோகனா’, 1924–ல் வெளிவந்தது.

4. பெண் விடுதலை, நாட்டுப்பற்று, மதுவிலக்கு, விதவைத் திருமணம் ஆகியவற்றைத் தன் நாவல்கள் மூலம் வலியுறுத்தினார்.

5. அணிகலன்களைத் துறந்து கதராடை மட்டுமே அணிந்தார். மது ஒழிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார்.

6. ‘மகாத்மாஜி சேவா சங்கம்’ தொடங்கி ஏழைகள், ஆதரவற்ற குழந்தைகள், பெண்களுக்கு உதவிகளைச் செய்தார். துப்பறியும் நாவல்கள் உட்பட மொத்தம் 115, நாவல்களை எழுதியுள்ளார். தமிழில் துப்பறியும் நாவல் எழுதிய முதல் பெண் எழுத்தாளர் இவர்தான்.

7. 115, புதினங்களை எழுதியவர். தான் வாழ்ந்த 59, ஆண்டுகளில் 35, ஆண்டுகள் எழுத்தே உலகம் என்று இயங்கினார்.

# பெங்களூரிலிருந்து கடத்தி வந்த 91 கிலோ குட்கா பறிமுதல்



தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவின் படி அனைத்து உட்கோட்ட காவல் பகுதிகளிலும் போதைப்பொருட்களுக்கு எதிராக தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில் தஞ்சை நகர உட்கோட்டம் கிழக்கு காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட காந்திஜி சாலையில் தனியார் பேருந்தில் பெங்களூரிலிருந்து தஞ்சை அய்யம் பேட்டையைச் சேர்ந்த ராபர்ட் (வயது 32) என்பவர் குட்கா கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் ஆய்வாளர் திரு.சுப்ரமணியன் அவர்கள் தலைமையிலான காவலர்கள் சோதனை மேற்கொண்டதில் 91 கிலோ குட்கா கைப்பற்றப்பட்டு குற்றவாளியான ராபர்ட் என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நிருபர்: சத்தியராஜ், தஞ்சாவூர்.




# பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இணைய வழி குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு

## நெல்லை மாநகர சைபர் கிரைம் காவல்துறையினர் முயற்சி

திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் திரு.ரூபேஷ்குமார் மீனா IPS., அவர்கள் உத்தரவின் படி காவல் துணை ஆணையர்கள் (மேற்கு) திருமதி.V.கீதா அவர்கள், (தலைமையிடம்) திருமதி.G.S.அனிதா அவர்கள் மற்றும் (கிழக்கு) திரு.S.விஜயகுமார் அவர்கள் ஆகியோரின் மேற்பார்வையில், திருநெல்வேலி மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் நிலையில் 03-12-2024 ம் தேதியன்று, பாளையங்கோட்டை ஜெயந்திரா மெட்ரிகுலேஷன் பள்ளியில் மாணவ, மாணவியர் களுக்கு சமூக வலைதளங்களில் உள்ள ஷாப்பிங் நிறுவனங்களின் பெயரில் மோசடி நடைபெறுவது குறித்தும், ATM கார்டு மற்றும் OTP குறித்தும், சமூக வலைத்தளத்தின் முலம் அறிமுகம் இல்லாத நபர்கள் தொடர்பு கொண்டால் அவர்களிடம் இருந்து எச்சரிக்கையாக இருப்பது பற்றியும், சமூக வலைதளம் மூலம் வேலைவாய்ப்பு மோசடி பற்றியும், அனைத்து இணையவழி குற்றங்கள் மற்றும் பண மோசடி குறித்தும், சைபர் கிரைம் காவல்துறையினரின் இலவச எண் 1930 பயன்படுத்துவது பற்றியும், சைபர் கிரைம் காவல்துறையினரின் https://cybercrime.gov.in/ என்ற இணையதளம் பற்றியும் விழிப்புணர்வு வாசகங்களை வழங்கி விழிப்புணர்வு நிகழ்ச்சியில், நெல்லை மாநகர சைபர் கிரைம் பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. சண்முகவடிவு அவர்கள், தலைமையிலான காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் சைபர் கிரைம் காவல்துறையினர் கலந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

நிருபர்: ஆறுமுகச்சாமி, திருநெல்வேலி


செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438



எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்று கலங்காதே..
எதையும் எதிர்கொள்ளும் மனோதிடத்துடன்
முன்னேறு வெற்றியின் உச்சியை அடையலாம்.
என்றுமே...
உன் வாழ்க்கை; உன் கையில்..

– ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்

### புதுக்கோட்டையில் மாதாந்திர குற்ற ஆய்வு கூட்டம்

# வழக்குகளில் சிறப்பாக பணிபுரிந்த காவல் அதிகாரிகள், ஆளிநர்களுக்கு SP திருமதி.வந்திதா பாண்டே பாராட்டு

புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.வந்திதா பாண்டே IPS., அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட அனைத்து காவல் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு பணி தொடர்பான மாதாந்திர குற்ற ஆய்வுக் கூட்டம் (Monthly Crime Review Meeting) நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

குற்ற வழக்குகளில் சிறப்பாக பணிபுரிந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் மொத்தம் 38 நபர்களை (03.12.2024) நேரடியாக வரவழைத்து பாராட்டி நற்சான்றிதழ் வழங்கினார்கள்.

நிருபர்: A.K.ஷாஜஹா, புதுக்கோட்டை










# தெய்வீக சக்தி கொண்ட விலங்குகளும் பறவைகளும்

நம்முடைய சித்தர்களும் யோகிகளும் ரிஷிகளும் நம் ஞானிகளும் மனிதன் உயர்வான வாழ்க்கை வாழ்வதற்கு வழிகளை கூறியுள்ளனர்.

சித்த வைத்தியம், தியானம், யோகம், தற்காப்புக் கலைகள், தெய்வீக வழிபாடுகள் இயற்கையை காப்பாற்றுதல் போன்ற பல விசயங்களை தம்முடைய சிஷ்யர்களுக்கும் சிஷ்யர்கள் மூலமாக மக்களுக்கும் கற்றுக்கொடுத்துள்ளனர்.

நம்முடைய முன்னோர்கள் வழிபடும் தெய்வங்களுக்கு அனைத்து விதமான பறவைகளும் விலங்குகளும் வாகனமாகவும் இருந்துள்ளது. பல வகையான மரங்களும் நம் ஆலயங்களுக்கு ஸ்தல விருட்சமாக இருந்துள்ளது. சில தெய்வங்கள் மிருக வடிவத்திலேயே அவதாரம் எடுத்துள்ளனர்.

சரபேஷ்வரர், நரசிம்மர், ஆஞ்சநேயர், மச்ச மூர்த்தி, வராகர், ஹயக்கிரீவர், கணபதி இன்னும் பல உருவங்கள் இருக்கின்றது. இவைகள் அதர்மத்தை அழித்து தர்மத்தை காக்க வந்த அவதாரங்களாகும். தெய்வங்களின் வாகனங்களை பார்ப்போம்.

**தெய்வங்களின் வாகனங்களும் அவர்களுடன் இருக்கும் உயிர்களும்...**

**ஆண் தெய்வங்கள்:**

சிவபெருமான்: காளை வாகனனமாக கொண்டவர். அவர் கழுத்தில் பாம்பும் இருக்கும்.

விஷ்ணு: கருட வாகனம், ஆதிசேஷன் விஷ்ணுவுக்கு படுக்கையாக உள்ள்ளது.

பிரம்மா: அன்னப்பறவையை வாகனமாக கொண்டவர்

கணபதி: எலி (மூஞ்சூரு) வாகனம், யானை முகம் கொண்டவர்

முருகன்: முருகனுக்கு மயில் வாகனம். பாம்பும், சேவலும் கூட இருக்கும்.

பைரவர்: பொதுவாக நாய் வாகனமாக உள்ளது. ஆனால், அஷ்ட பைரவருக்கும் ஒவ்வொரு வாகனம் உள்ளது.

எம தர்மர்: எருமை மாடு

அக்னி பகவான்: ஆட்டுக்கிடா

ஓம் காளி ஓம் நமசிவாய



# கருடசித்தர்

**Dr.பாலகிருஷ்ண சுவாமி**
எரசை, தேனி மாவட்டம்.

வருண பகவான்: முதலை வாகனம்

வாயு: வாயு பகவானக்கு மான் வாகனமாக உள்ளது.

ஐயப்பன்: புலி வாகனம்.

கிருஷ்ண பரமாதிமா: அனைத்து உயிர்களும் அவருக்கு வாகனமே, அனைத்து உயிர்களும் அன்பாக அவருடன் இருக்கும். இதுபோல், இன்னும் ஆண் தெய்வங்களுக்கு சொல்லிக் கொண்டே போகலாம்.

நவக்கிரகங்கள் வாகனம்

சூரியன்: ஏழு குதிரை வாகனம், சந்திரன்: மான் வாகனம், செவ்வாய்: ஆட்டுக் கிடா வாகனம், புதன்: சிங்கம் வாகனம், வியாழன் (குரு): யானை வாகனம், சுக்கிரன்: குதிரை வாகனம், சனி: காகம் வாகனம், ராகு: சிங்கம் , கேது: கழுகு.

இதேபோல ஆண் தெய்வங்களுக்கு சொல்லிக் கொண்டே போகலாம்.

**பெண் தெய்வங்களின் வாகனங்கள்:**

பார்வதி: சிம்மம், மகாலெட்சுமி: ஆந்தை, சரஸ்வதி: அன்னப்பறவை, காளி: சிம்மம், மாரியம்மன்: புலி, சிங்கம்.

அஷ்ட யோகினிகள் 64-க்கும் 64 வாகனங்கள்.

இதேபோல, பெண் தெய்வங்களுக்கும் சொல்லிக் கொண்டே போகலாம்.

தச மகா சக்திகளின் தெய்வங்களுக்கும் தனித்தனி வாகனம் உள்ளது.

சப்த கன்னிகள் ஏழுக்கும் ஒவ்வாரு வாகனம் உள்ளது.

நம்முடைய தெய்வங்கள் அனைத்திற்க்கும் ஒவ்வொரு பறவைகளும், மிருகங்களும் வாகனங்களாக உள்ளது.

**விஷ்ணுவின் அம்சங்கள்:**

விஷ்ணுவின் அம்சமாக மீன் உருவம் (மச்சம்), பன்றி உருவம் (வராகம்), ஆமை உருவம், குதிரை உருவம் (ஹயக்கிரீவர்) என்று நாம் போற்றி வணங்குகின்றோம்.

ஆஞ்சநேயர்: ஆஞ்சநேயர் குரங்கின் அம்சமாகவே உள்ளார். அவரை நாம் தெய்வமாக வணங்குகிறோம்.

நரசிம்மர்: நரசிம்மர் மனித உடலும், சிங்க முகமும் கொண்டதாக அநீதியை அழிக்கும் அகோர உருவமாக உள்ளார்.

வராகி: வராகி பன்றி முகத்தோடு காணப்படும் தெய்வம். அவரை நம் பக்தியுடன் வழிபட வேண்டும்.

கணபதி (விநாயகர்): கணபதி யானையின் முகத்தோடும் உடலோடும் அம்சமாக இருக்கின்றார். அவரை மூலாதர கணபதியாகவும், மூல கணபதியாகவும் வழிபடுகின்றோம். அனைத்து மிருகங்களும் பறவைகளும் தெய்வீக வடிவத்தோடும், தெய்வீகத்தோடும் தொடர்புடையதாக உள்ளது. அவைகளை அழியவிடாமல் மனிதர்கள் பாதுகாக்க வேண்டும்.

அந்த வகையில் கணபதியின் அம்சத்தோடும் அருளோடும் இருக்கக் கூடிய யானை தெய்வீக பிராணியாகும்.

தெய்வீக ஞானத்தைக் கொண்டது யானை

யானை ஒரு தெய்வீக ஞானத்தை கொண்ட விலங்காகும். இயற்கையின் பருவ மாற்றங்களை முன்பே கணித்து அறிந்துதன்னை மாற்றிக் கொள்ளும். வனங்களில் வாழும்போது இயற்கை சீற்றம் என்றாலும் நிலநடுக்கம் என்றாலும் அவை வருவதற்கு முன்பே அந்த இடத்தை விட்டு கடந்து சென்றுவிடும்.

**அன்பு செய்பவரிடம் அன்பு செய்யும்**

தன் மேல் உண்மையாக அன்பு வைத்துள்ளவர்களை யானை புரிந்து கொள்ளும். அவர்களிடம் உரிமையாகவும் உண்மையாகவும் குழந்தைபோல நடந்து கொள்ளும்.

**தீங்கு செய்பவரை மறக்காது:**

தனக்கு தீங்கு செய்பவர்களையும் தன்னை அனுதினமும் சித்ரவதை செய்பவர்களையும் மனதில் ஓரமாக மறக்காமல் வைத்திருக்கும். அதற்கான வாய்ப்புகள் வரும்போது, அவர்களை தண்டிக்கும். மனிதர்கள் தவறு இல்லாமல் அது மனிதனுக்கு தீங்கு செய்யாது. மனிதன் அதனை சித்ரவதை செய்து மிரள வைப்பதானால் அது மனிதனை வெறுக்கிறது.

**மன்னர்களும், யானைகளும்**

மன்னர்கள் போர் செய்வதற்கு யானைகளை பயன்படுத்தி உள்ளனர். காலாட் படைகளும், யானை படைகளும், குதிரை படைகளும் பயன்படுத்தினார்கள். மிருகங்களை யார் சித்ரவதை செய்திருந்தாலும் அவர்களுக்கு கர்மா வந்தே தீரும். சித்ரவதை செய்யாமல் மிருகங்களை பழக்கினால் கர்மா குறைவாக இருக்கும். யாராக இருந்தாலும் கர்மா வேலை செய்யும். கர்மாவிலிருந்து யாரும் தப்ப முடியாது.

**வேட்டையாடுவது பொழுதுபோக்கு**

மன்னர்கள் அனைவரும் உயிர்களை வதைத்தது இல்லை. பாதி மன்னர்கள் நீதியாலும் அன்பு வழியிலும் இருந்தார்கள். பாதி மன்னர்கள் வேட்டையாடுவது பொழுதுபோக்காக கருதினார்கள். உயிர்களை வதைத்து வேட்டையாடுவதும் ஒரு பாவச் செயலாகும். மன்னர்களுக்கு அது பொழுதுபோக்கு. காட்டில் உள்ள விலங்குகளும் பறவைகளுக்கும் உயிர் சித்ரவதையாகும். அப்படிப்பட்ட மன்னர்கள் கர்மாவை வாங்கி மோசமாக அழிந்தார்கள்.

**உயிர்களுக்கு அன்பு செய்யும் மன்னர்கள்**

உயிர்களுக்கு அன்பு செய்யும் மன்னர்களும் பழங்காலத்தில் வாழ்ந்துள்ளனர். நீதி தவறாமல் வாழ்ந்துள்ளனர். நீதி வழுவா நெறிமுறைகளுடைய



வாழ்ந்துள்ளனர். அன்பு நெறி தவறாமல் வாழ்ந்த மன்னர்கள் பழங்காலத்தில் இருந்துள்ளனர்.

**மனுநீதிச் சோழன்**

பசுவின் கன்றை மன்னனின் மகன் தேர்க்காலில் நசுக்கி கொன்றான். தன் கன்றை இளவரசன் கொன்றதால் பசு அரண்மனையில் அபாய மணியை இழுத்து ஒலி ஒலித்தது. அதை கண்ட மனுநீதிச் சோழன் நடந்த விவரத்தை அறிந்தான். தன் மகனையும் தேர்க்காலில் வைத்து நசுக்கினான். பசுவுக்காக நீதி செய்தான்.

**சிபி சக்கரவர்த்தி**

பருந்து ஒன்று புறாவை கொன்று தின்பதற்கு துரத்திக் கொண்டு வந்தது. புறா பயந்து சிபி மன்னரிடம் அடைக்கலம் புகுந்தது. பின்பு பருந்தையும் பசியோடு அனுப்பாமலும் புறாவையும் கொல்லாமலும் தன்னுடைய தொடையின் சதையை புறாவுக்கு எடைக்கு எடை கொடுத்து புறாவின் உயிரைக் காப்பாற்றினாள். இப்படிப்பட்ட அன்பு நிறைந்த பூமியாகும்.

**பாரி மன்னன்**

பாரி மன்னன் தேர் வாகனம் ஏறி உலா வரும் போது வழியில் ஒரு முல்லைக் கொடி படர்வதற்கு கிளை இல்லாமல் தவித்துக் கொண்டு இருந்தது. இதைப் பார்த்து மனம் வருந்திய பாரி மன்னன் தான் ஓட்டி வந்த தேரையே அதற்கு வாகனமாக அளித்தான்.

**பேகன் மன்னன்**

மயில் ஒன்று மழைக்காலத்தில் ஆடிக் கொண்டிருந்தது. அது குளிரால் நடுங்குகின்றது என்று நினைத்து அதற்கு தன்னுடைய போர்வையை போர்த்தி விட்டான் பேகன். இதுபோல் கடையேழு வள்ளல்களும் நீதிநெறி தவறாமல் அன்பை நிலை நாட்டினார்கள்.

**பொற்கை பாண்டியன்**

தன் குடிமக்களின் ஒரு வீட்டை கள்வர்கள் கொள்ளையடித்தார்கள் என்று நினைத்து அந்த வீட்டுக் கதவை தட்டினார். வீட்டில் இருப்பவர் திருடன் இல்லை அவருடைய கணவர் என்று தெரிந்தவுடன். சந்தேகப்படக்கூடாது என்று நினைத்து அனைத்து வீட்டுக் கதவுகளையம் தட்டி அதன் குற்றத்தால் தன் கையை வெட்டிக் கொண்டார். இதனால் அவருக்கு நீதி தேவதையால் பொற்கை வளர்ந்தது. தம் முன்னோர்கள் நல்ல நீதியையும் உயிர்களை துன்பப்படுத்தாத செயல்களையும் நமக்கு கற்றுக் கொடுத்துள்ளனர்.

**வள்ளலாரின் கொல்லாமை**

இராமலிங்க அடிகளாரும் உயிர்களை கொல்வதை முழுமையாக சாடியுள்ளார். எளிய உயிர்களை கொல்வதும் சித்ரவதை செய்வதும் தீய நரகத்திற்கு நம் ஆன்மாவை கொண்டும் செல்லும் வழியாகும்.

வள்ளலார் பெருமான் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர். பசியால் வாடும் உயிர்களை கண்டு உள்ளம் துடிப்பவர். அவர் போதனைகளையும் நாம் நம் வாழ்வில் கடைபிடிக்க வேண்டும்.

**கலியுகத்தின் உயிர் வதை**

அந்த கால கட்டத்தில் இருந்ததை விட இந்தக் காலத்தில் உயிர் வதைகள் அதிகமாக உள்ளது. மனித இனம் பூமியில் அனைத்து உயிர்களையும் கொன்றும் தின்றும் அழிக்க ஆரம்பித்துவிட்டது.

**இயற்கை உயிரினங்கள் அழிக்கப்படுகிறது**

நம்முடைய மரபு இயற்கை உயிரினங்கள் மறைமுகமாக அழிக்கப்படுகின்றது. ஆடு, கோழி, மாடு, நாய்கள், பன்றிகள், யானைகள், கழுதைகள் என்று நாம் சொல்லிக் கொண்டே போகலாம். நாம் உயிர்களை கொல்லும் ஒவ்வொரு கர்மாவிற்கும்



மனிதன் கர்ம தண்டனை அனுபவித்தே ஆவான்.

நாட்டு விலங்குகளையும் காட்டு விலங்குகளையும் மனிதன் சித்ரவதை செய்து உணவுக்காக கொன்று அழிக்கின்றான். வேட்டையாடுவது ஒரு கொடிய பாவம். வேட்டையாடிய மன்னர்களின் ஆட்சி அழிந்து விட்டது. மன்னர்கள் நினைவுச் சின்னங்கள் அழிந்துவிட்டது.

**யானைகள் குறிவைக்கப்படுகின்றன**

ஒவ்வொரு விலங்குகளும், பறவைகளும் நாம் வணங்கும் தெய்வீகத்தோடு தொடர்பு உள்ளது. அந்த வகையில் யானையும் கணபதி அம்சத்தோடு வாழ்கின்றது. வனத்தில் உள்ள யானைகள் வேட்டையாடப்படுகின்றன.

உலகம் முழுவதிலும் யானைகள் குறிவைக்கப் படுகின்றன. உணவு இல்லாமலும், நீர் இல்லாமலும் யானைகள் இறக்கின்றன. யானைகள் அழிய வேண்டிய சூழ்நிலைகளை மனிதன் உருவாக்குகின்றான். இப்பொழுது ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பஞ்சம் ஏற்பட்டு அங்கு வனத்தில் உள்ள யானைகளும் உணவாக மாறிவிட்டன. அந்த வன விலங்குகளை காப்பாற்ற எந்த நாடும் முன்வரவில்லை. மனித நேயம் பேசுபவர்களையும், பறவைகலையும் காக்கக் கூடியவர்கள் என்று சொல்லிக் கொள்வபவர்கள் இதைப் பற்றி கண்டு கொள்ளவே இல்லை.

**யானைகள் அழிந்தால் மனித குலம் அழியும்**

யானைகளை கொல்வது ஒரு கொடிய பாவமாகும். யானைகளை கொல்வது ஏழு தலைமுறைக்கும் சாபமாகும். சமீப காலமாக யானைகளை அழிக்கும் பணி உலகெங்கும் நடந்து கொண்டிருக்கிறது. அது தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் தொடர்ந்து நடக்கின்றது.

இப்போது தமிழ்நாட்டில் கோவில் யானைகள் குறிவைக்கப்படுகின்றன. ஒரு யானையைக் கொல்ல வேண்டும் என்றால் அந்த யானையை மக்களிடம் வெறி மதம் பிடித்த யானைபோல் காண்பிக்க வேண்டும்.

யானைக்கு வெறி பிடிக்க வேண்டும் என்றால் அதன் உணவில் போதை மருந்துகளை கொடுத்து செயற்கையாக மதம் பிடிக்க வைத்து மனிதர்களை கொல்லச் செய்வார்கள். மனிர்களை கொன்றவுடன் யானை குற்றவாளியாகும். பின்பு அது தனிமைப்படுத்தப்படும். பின்பு யானைக்கு கொஞ்சம் கொஞ்சமாக கொல்லும் விஷத்தை உணவுடன் கொடுத்து கொலை செய்வார்கள். பின்பு யானையை பற்றிய நினைவே மக்களிடம் இருக்காது.

சமீபத்தில் தமிழகத்தில் கோவிலில் உள்ள யானை தீப்பிடித்து இறந்தது. அதன் குற்றவாளிகள் யார் என்று தெரியாமல் மர்மமாக அடங்கிவிட்டது.

கொஞ்ச காலத்திற்கு முன்பு கேரளாவில் இருந்து அரிசி கொம்பன் யானைக்கு வெறி மனிதர்களால் தூண்டப்பட்டது. பின்பு அது தனிமைப்படுத்தப்பட்டது. பலியானது. அதைப் பற்றி மக்களிடம் எந்தப் பேச்சும் இல்லாத அளவுக்கு அடங்கி விட்டது.

இப்போது தெய்வானை என்ற கோவில் யானை மாட்டிக் கொண்டது. இரக்கமற்ற மனிதர்கள் கையில் மாட்டிக் கொண்டது. கலியுகத்தின் கொடுமை பூமியில் நடக்க ஆரம்பித்துவிட்டது. யானைகள் அழிவது பூமியில் மனித குலம் அழிவதற்கு அறிகுறியாகும்.

மனித இனம் திருந்தாவிட்டால் பூமியில் மனித குலம் அழிந்து ஒழியும். உயிர்கள் அழிவதை கண்டு கொள்ளாமல் நீ எந்த தெய்வத்தை வணங்கினாலும் ஒரு பயனும் கிடைக்காது.

மனிதன் இன்னொரு கிரகத்தில் வாழ்வதை தேடுவதைவிட, இருக்கும் பூமியில் இயற்கை உயிரினங்களையும் இயற்கையையும் காப்பாற்றுங்கள். அப்பொழுதுதான் மனித குலம் தப்பிக்கும். எளிய உயிர்களையும் வனத்தில் உள்ள மரங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் காப்பாற்றுவது மனிதனுடைய தலையாய கடமையாகும். இவைகளை காப்பதே பூமியை காப்பதாகும்.

# டிசம்பர் மாதத்தில் நடக்கும் முக்கிய கிரக பெயர்ச்சிகள்



## 5 ராசிகளுக்கு பண மழை

ஆங்கில மாதங்களில் கடைசியாக வரக்கூடிய டிசம்பர் மாதத்தில் சூரியன், செவ்வாய் உள்ளிட்ட நான்கு கிரகங்களின் பெயர்ச்சி நடக்க உள்ளன. இதன் காரணமாக சில ராசியை சேர்ந்தவர்களுக்கு தங்கள் வாழ்க்கையில் செழிப்பும், பண வருவாயும் பெருக உள்ளது. 2024 ஆம் ஆண்டின் கடைசி மாதமான டிசம்பர் மாதத்தில் சில முக்கிய கிரகங்களின் பெயர்ச்சி நடக்க உள்ளன. இந்த மாதத்தில் புதன் இருமுறை பெயர்ச்சி ஆகிறார். மேலும் இந்த மாதத்தில் நடக்கக்கூடிய கிரகங்களின் சேர்க்கை காரணமாக 5 ராசியை சேர்ந்தவர்களுக்கு தங்கள் வாழ்க்கையில் பெரிய அளவில் வெற்றியும், பண வரவும் ஏற்பட உள்ளது. எந்தெந்த ராசிகளுக்கு டிசம்பர் மாதத்தில் நடக்கும் கிரக பெயர்ச்சிகளால் அதிர்ஷ்டமானதாக இருக்கும் என தெரிந்து கொள்வோம்.

**டிசம்பர் 2ஆம் தேதி சுக்கிர பகவான் மகர ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார்.**

**டிசம்பர் 7ஆம் தேதி செவ்வாய் பகவான் கடக ராசி வக்கிர நிலையான பின்னோக்கி நகர தொடங்குகிறார்.**

**டிசம்பர் 15ஆம் தேதி சூரிய பகவான் விருச்சிகத்தில் இருந்து தனுசு ராசிக்கு பெயர்ச்சி இருக்கிறார்.**

**டிசம்பர் 16ஆம் தேதி புதன் பகவான் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தி அடைந்து நேராக நகரத் தொடங்குகிறார்.**

**டிசம்பர் 28ஆம் தேதி சுக்கிர பகவான் கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார்.**

**டிசம்பர் மாதத்தில் நடக்கும் முக்கிய கிரக பெயர்ச்சிகள்: 5 ராசிகளுக்கு சாதகமான பலன்களையும், பண வரவும் ஏற்பட உள்ளது.**

மேஷ ராசியை சேர்ந்தவர்களுக்கு டிசம்பர் மாதத்தில் நடக்கும் கிரக பெயர்ச்சிகள் காரணமாக ஐந்து மாதத்தில் பலவிதத்தில் சுப பலன்கள் பெறுவார்கள். உங்களின் வருவாய் உயரும். வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளும், சுப யோகங்களும் உண்டாகும். சமூகத்தில் உங்களின் மரியாதை அதிகரிக்கும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில் ரீதியாக முன்னேற்றமும், பண வருவாயும் ஏற்படும். வியாபாரிகளுக்கு புதிய ஒப்பந்தம் கிடைக்கும். குடும்பத்தின் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும்.

ரிஷப ராசியை சேர்ந்தவர்களுக்கு இந்த மாதம் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். உங்களின் தன்னம்பிக்கை மற்றும் சிறப்பான செயல்பாட்டால் வேலைகளை வேகமாக செய்து முடிப்பீர்கள். இந்த மாதத்தில் தொழிலதிபர்களுக்கு புதிய ஒப்பந்தங்களும், தொழிலில் விரிவாக்கவும் சாதகமான சூழல் உருவாகும். வாழ்க்கைத் துணை எல்லாம் இருந்த மன வருத்தம், சச்சரவுகள் நீங்கும். குடும்பத்தினரை அனுசரித்துச் செல்லவும்.

மிதுன ராசியை சேர்ந்தவர்களுக்கு கலவையான பலன்கள் கிடைக்கும். டிசம்பர் மாத தொடக்கத்தில் உங்கள் வீட்டிலும், வெளியிடத்திலும் பிறரின் முழு ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் வேலை தொடர்பாக மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் உண்டு. இடமாற்றத்திற்கான கோரிக்கை நிறைவேறும். மாணவர்களுக்கு தேர்வு, விளையாட்டுப் போட்டி போன்றவற்றிற்குச் சாதகமான காலமாக இருக்கும். சொந்த தொழில் செய்யக் கூடியவர்களுக்கு, தொழிலை விரிவுபடுத்தச் சாதகமான மாதமாக இருக்கும். புதிய கடை அல்லது புதிய தொழிலுக்கான வாய்ப்புகள் உண்டு. இது தொடர்பாக உங்கள் நலம் விரும்பிகளின் ஆலோசனை பெறுவது நன்மை தரும். மாதத்தில் இரண்டாம் வாரத்தில் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக பயணம் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

சிம்ம ராசியை சேர்ந்தவர்களுக்கு டிசம்பர் மாதத்தில் சாதகமான பலன்கள் அதிகமாக கிடைக்கும். உங்களின் தொழில் தொடர்பாக சிறப்பான பலன் பெறுவீர்கள். சொந்த தொழில் செய்யக் கூடியவர்கள் முன்னேற்றத்தையும், புதிய தொழிலைத் தொடங்க வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த பண வரவு இருக்கும். காதல் வாழ்க்கைக்குச் சிறப்பான சூழல் நிலவும். துணையுடன் மகிழ்ச்சியாக நேரத்தை செலவிடுவீர்கள். உங்களின் ஆரோக்கியம் முன்னேற்றம் அடையும். குடும்ப உறவு வலுவடையும்.

மீன ராசி சேர்ந்தவர்களுக்கு டிசம்பர் மாதத்தில் விருப்பங்களை நிறைவேறும். வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான பல்வேறு வழிகள் பிறக்கும். பணியிடத்தில் உங்களின் திறமையை நிரூபிக்கவும், சூழலும் சாதகமாக இருக்கும். சிலருடன் சேர்ந்து செய்யக்கூடிய எந்த ஒரு வேலையிலும் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். உங்கள் வேலையை முடிப்பதில் ஆரோக்கியம் சாதகமானதாக இருக்கும்.

மேஷம்

## மேஷ ராசி அன்பர்களே...

தங்கள் செல்வாக்கை வெளிகாட்டிக் கொள்ளாதவர் நீங்கள். மிகவும் எளிமையானவர். உத்யோகஸ்தர்களுக்கு உத்யோகத்தில் தங்கள் வேலையில் சிறு சிக்கல்கள் ஏற்படும். அதனை அழகாக செய்து முடித்து தாங்கள் தங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. ஏனெனில் கடன் கொடுத்து விட்டு பின்பு வருந்துவதை விட கொடுப்பதை தவிர்க்கலாம். குடும்பத்தலைவிகளை பொருத்தவரை கணவனுடன் இணைந்து செயல்பட்டு குடும்ப நலனுக்கு பாடுபடுவர். இந்த கால கட்டத்தில் தங்களுக்கு பணப்பற்றாக்குறை ஏற்படும். ஆதலால்,சிக்கன நடவடிக்கையை எடுப்பீர்கள். கலைஞர்களுக்கு தங்கள் திறமையை அதிகரிக்க ஒரு சிலர் கூத்துப் பட்டறையில் சேருவீர்கள். தாங்கள் நினைத்த கதாபாத்திரமும் கிடைக்கும். அரசு தேர்வு எழுதும் மாணவர்கள் படிப்பில் கவனமுடன் படித்து எழுதி பார்ப்பது மிக நல்லது. நேரத்தை வீணடிக்காமல் படிப்பது தேர்வு சமயத்தில் மிகவும் சுலபமாக சுலபமாக இருக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: துர்க்கையை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: துக்க நிவாரண அஷ்ட்டகம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது |**

**பரிகாரம்: முருகருக்கு சிவப்பு மலரால் மாலையோ அல்லது பூச்சரமோ அணிவித்து வழிபடவும். | சந்திராஷ்டமம்: மார்கழி மாதம் 12 ம் தேதி 27/12/2024 வெள்ளிக்கிழமை பகல் மணி 2.35 முதல் மார்கழி 14-ம் தேதி 29/12/2024 ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 12.18 மணி வரை.**

ரிஷபம்

## ரிஷப ராசி அன்பர்களே...

பெற்றோர்களைப் போல நண்பர்களையும் நினைக்கும் அன்பு மிக்கவர் நீங்கள்.

ஒருபோதும் நண்பர்களுக்கு துரோகம் செய்யாத பண்பாளர். உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் சரிவர வராமல், அதாவது காலம் தாழ்த்தி வந்த சம்பளம் இனி மாத ஆரம்பத்திலேயே கிடைக்கும். வியாபாரிகள் தேவையற்ற காலவிரயத்தை தவிர்க்கவும். காரணம் தங்களுக்கு அடிக்கடி மறதி வந்து போகும். தங்கள் வேலைகளை டைரியில் எழுதி வைத்துக் கொண்டு திட்டமிட்டு செயல்படுங்கள். குடும்பத் தலைவிகள் தாங்கள் எதிர்பார்த்தவாறு இதுவரை சேர்த்து வைத்த பணம் அல்லது சீட்டு தொகையில் தங்களுக்கு புதிய நகை வாங்குவீர்கள். வாகனஓட்டும்போது கவனம் தேவை.ஐ.ஏ.எஸ். போன்ற குடிமைப் பணிகளுக்காக முயற்சிக்கும் மாணவர்கள் தற்போதிலிருந்தே பொது அறிவு விசயங்களை தெரிந்து கொள்வது நல்லது. மாணவர்கள் அதற்குண்டான குரூப்பை தேர்வு செய்வது நல்லது.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: அம்பாளை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: லலிதா ஸகஸ்ரநாமம் சொல்லுதல் | பரிகாரம்: அங்காள அம்மனுக்கு முல்லை பூச்சரம் கொடுத்து கும்பிடவும். | சந்திராஷ்ட்டமம்: மார்கழி 14ம் தேதி 29/12/2024 ஞாயிற்றுக்கிழமை இரவு 12.19 மணி முதல் மார்கழி மாதம் 17ம் தேதி 01/01/2024 புதன் கிழமை இரவு மணி 7.36 வரை**

மிதுனம்

## மிதுன ராசி அன்பர்களே...

வருடைய சிபாரிசும் இன்றி தங்கள் தனித்திறமையால் முன்னேறிக் கொண்டடிருப்பவர் நீங்கள். எந்த பிரச்சினை வந்தாலும் நேருக்கு நேர் நின்று சமாளிப்பவர். சிறப்புப் பலன்கள் மார்க்கெட்டிங் பிரிவில் வேலை செய்யும் உத்யோகஸ்தர்களுக்கு நீண்ட நாட்களாக தாங்கள் கேட்ட சில முக்கிய சலுகைகள் கிடைக்கும். கவலை வேண்டாம். இந்த மாதம் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. வியாபாரிகள் தங்கள் கொள்முதலை பெருக்குவீர்கள். சேமிப்பும் கூடும். மளிகைக்கடை வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு லாபம் உயரும். குடும்பத் தலைவிகளுக்கு பணம் தேவைக்கேற்ப கிடைக்கும். மாமியார் மருமகள் உறவு நன்றாக இருக்கும். திரைத்துறை கலைஞர்களுக்கு வெளிமாநிலத்தில் இருந்து வேற்று மொழிகளில் நடிக்க அழைப்பு வரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது முழுமையாக கவனமாகப் படிபடித்துவிட்டு கையெழுத்திடுவது நல்லது. மாணவர்களுக்கு சோம்பேறித்தனம் குடிகொள்ளும். ஆதலால், மனதை ஒருமுகப்படுத்தி படிப்பில் கவனம் செலுத்தவேண்டும்

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் குரு பகவானை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: விநாயகர் அகவல் சொல்லுதல் | பரிகாரம்: பெருமாளை புதன்கிழமை அன்று தரிசிப்பது நல்லது. | சந்திராஷ்ட்டமம்: (1)கார்த்திகை மாதம் 19ம் தேதி 04/12/2024 புதன் கிழமை இரவு மணி 11.41 முதல் கார்த்திகை மாதம் 22ம் தேதி 07/12/2024 சனிக்கிழமை அதிகாலை 4.27 மணி வரை (11) மார்கழி மாதம் 17ம் தேதி 01/1/2025 புதன் கிழமை காலை 7.37மணி முதல் மார்கழி மாதம் 19ம் தேதி 03/01/2025 வெள்ளிக் கிழமை பகல்12.33 மணி வரை**

கடகம்

## கடக ராசி அன்பர்களே...

எந்த விசயத்திலும் அவசரம் காட்டாமல் பொறுமையை கடைப்பிடிப்பவர் நீங்கள். கோபத்தை குறைத்து விவேகத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர். உத்யோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் சக ஊழியர்கள் தங்கள் வேலையை பகிர்ந்து கொண்டு தங்களின் பேரன்பை பெறுவர். குடும்பமாக பழகுவார்கள். வியாபாரம் செய்யும் இளைஞர்களுக்கு அடிக்கடி குறுகிய தூர பயணங்களை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை வரும். முதலில் செலவுகள் அதிகமாக இருந்தாலும் தங்களுக்கு இனி வருங்காலத்தில் அது ஒரு அடித்தளமாக அமைந்துவிடும். குடும்பத் தலைவிகளுக்கு பலகாலமாக கற்பனை செய்து வைத்துக்கொண்டிருந்த வீடு கட்டும் பணி நிறைவேறும். தங்கள் கணவரின் அன்பைப் பரிபூர ணமாகப் பெற்று மனமகிழ்வு கொள்வார்கள். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புக்கான மாதம் இது. பல காலமாக தாங்கள் பட வாய்ப்புக்காக தாங்கள் பட வாய்ப்புக்காக அலைந்து திரிந்தீர்கள். அதன் வெளிப்பாடு தங்களுக்கு நல்ல கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைக்கும் மாணவ, மாணவிகள் தங்களது சகமாணவர்களுடன் இணக்கமாக செல்வது நல்லது.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் செவ்வாய் பகவானை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: நவக்கிரஹகாயத்திரி சொல்லுதல் | பரிகாரம்: திருவேற்காடு கருமாரியம்மனை வெள்ளிக்கிழமை அன்று தரிசிப்பது நல்லது. சந்திராஷ்ட்டமம்: (1)கார்த்திகை 22ம் தேதி 07/12/2024 சனிக்கிழமை அதிகாலை 4.28 மணி முதல் கார்த்திகை 24ம் தேதி 9/12/2024 திங்கள் கிழமை காலை 7.36 மணி வரை (11) மார்கழி 19ம் தேதி 03/1/2025 வெள்ளிக்கிழமை பகல் 12.34 மணி முதல் மார்கழி 21ம் தேதி 5/1/2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.50 மணி வரை.**

சிம்மம்

## சிம்ம ராசி அன்பர்களே...

தன்னை மதித்துக் கேட்டால் தனக்கு தெரியா விட்டாலும் அதற்காக அலைந்து திரிந்தாவது தெரிந்து கொண்டு சந்தேகத்தினை போக்கும் பொறுமைசாலி நீங்கள். உத்யோகஸ்தர்ளில் ஒரு சிலருக்கு நீண்ட காலமாக முயற்சித்த இடமாற்றக் கோரிக்கைகள் விரைவில் நடந்தேறும். கவலைவேண்டாம் அலுவலக இடமாற்றம் உண்டாகும். வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்ளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி செய்ய அதிகமான ஆர்டர்கள் கிடைக்கும். அதனை குறித்த நேரத்தில் தாங்கள் அனுப்பி வைத்து விடுவீர்கள். குடும்ப தலைவிகளில் சிலருக்கு கணவனுடன் ஏற்பட்ட பிணக்குகள் தீர்ந்து சந்தோஷமான சூழ்நிலை உண்டாகும். அன்பு பெருகும். கலைஞர்கள் தாங்கள் நினைத்தமாதிரியான கதாபாத்திரம் கிடைத்து தங்களுக்கு மனதில் உற்சாகத்துடன் காணப்படும் மாதமாகும். பணவரவுக்கும் குறையில்லை. மாணவர்கள் கல்வியில் ஆர்வமில்லாமல் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நேரத்தை வீணடிப்பதை தவிர்த்தால் அதிக மதிப்பெண்களை பெறலாம்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் சந்திர பகவானை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: குரு அஷ்டகம் சொல்லுதல் | பரிகாரம்: ஞாயிற்றுகிழமை அன்று லிங்கத்திற்கு பால் அபிஷேகம் செய்து தரிசிப்பது நல்லது. மனதில் மகிழ்ச்சி உண்டாகும். | சந்திராஷ்டமம்: கார்த்திகை மாதம் 24ம் தேதி 9/12/2024 திங்கள்கிழமை காலை 7.37மணி முதல் கார்த்திகை மாதம் 26ம் தேதி 11/12/2024 புதன்கிழமை காலை 10.00 மணி வரை.**

துலாம்

## துலா ராசி அன்பர்களே...

யார் யாரை எவ்விதத்தில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை அறிந்தவர் நீங்கள். உத்யோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த ஊதிய உயர்வோ இடமாற்றமோ கிடைப்பது சற்று தாமதப்படும். வேலை இல்லாதவர்களுக்கு தங்கள் கடின முயற்சியால் விரும்பிய வண்ணம் வேலை கிடைக்கும். வியாபரத்தை

விரிவுபடுத்த விளம்பர பலகைகளை ஆங்காங்கே வைக்க திட்டமிடுவீர்கள். மேலும், நாளிதழ்களில் விளம்பரப்படுத்துவீர்கள். குடும்பத் தலைவிகள் குடும்பத்தில் அன்னியர் தலையீடு உண்டாகும். அவற்றை பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும். தாயாரின் உடல்நிலையில் பிற்போக்கான நிலை உண்டாகும். கவனம் அவசியம்.

கலைஞர்கள் சிறு சிறு குறுபடங்களில் வாய்ப்புகளை பயன்படுத்துவது நல்லது. பின்பு உங்கள் நடிப்புக்கு இது பேருதவியாக இருக்கும். மாணவர்கள் காதலில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பது நல்லது.எதிர்பாலினிரிடத்தில் சற்று கவனமுடன் பழகுவது நல்லது..

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் ராகுபகவானை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: லெஷ்மி காயத்ரி சொல்லுதல் | பரிகாரம்: லட்சுமி நரசிம்மருக்கு புதன் கிழமை அன்று துளசி மாலை அணிவித்து வணங்குவது மனதில் மகிழ்ச்சி உண்டாகும். | சந்திராஷ்டமம்: கார்த்திகை மாதம் 28ம் தேதி 13/12/2024 வெள்ளிக்கிழமை பகல் 12.33 மணி முதல் கார்த்திகை மாதம் 30 ம் தேதி 15/12/2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.07 மணி வரை**

கன்னி

## கன்னி ராசி அன்பர்களே...

உங்களுக்கு எடுத்தெறிந்து பேசப் பிடிக்காது. யாரையும் கஷ்டப்படுத்தாமல் நாசூக்காக பழகும் இயல்புடையவர் நீங்கள் தான். உத்யோகஸ்தர் களைப் பொருத்தவரை உங்களின் திறமையை மேலதிகாரிகள் கண்டுபிடித்து உங்களை மேல்நிலைக்கு கொண்டு செல்ல முற்படுவர். ஆதலால், அதற்கு குறுக்கே நிற்காமல் அவர்களின் சொல்படி நடக்கப்பாருங்கள். வியாபாரிகள் வழக்கமாக செய்யும் வியாபாரத்தைத் தாண்டி மற்ற வேற்றுப் பொருட்களையும் சந்தைக்கு கொண்டுவந்து விற்பனை செய்வர். அதுவும் லாபத்தை தரும். குடும்பத் தலைவிகள் எவ்வளவு பணம் வந்தாலும் அதை சேமிக்க முடியாது என்ற நிலை மாறி அதிகளவு பணப் புழக்கம் ஏற்படும். இசைக் கருவிகள் இயக்குபவர்கள் போன்ற இயக்குபவர்கள் போன்ற கலைஞர்களுக்கு கச்சேரி புக்கிங் ஆகும். திரைபடத்துறையில் இருக்கும் கேமராமேன் போன்றவர்களுக்கும் ஒப்பந்தமா குமாகும் மாதமாகும். மாணவர்கள் தங்களின் எண்ணம் ஈடேற வேண்டுமென்றால், அதிகமாக, பேசுவதை நிறுத்திவிட்டு நன்கு படிப்பதும் மற்றும் எழுதிபார்ப்பதும் தங்களை உயர் இடத்தில் நிறுத்த இயலும். நல்லது.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: பெருமாளை வணங்கி வழிபடுதல் | ஸ்லோகம்: முருகன் அஷ்டகம் சொல்லுதல் | பரிகாரம்: காமாட்சி அம்மனுக்கு வெள்ளிக் கிழமை அன்று எலுமிச்சம் பழ மாலையை அனுவிப்பது நல்லது | சந்திராஷ்டமம்: கார்த்திகை 26 ம் தேதி 11 /12/2024 புதன்கிழமை காலை 10.01 மணி முதல் கார்த்திகை 28ம் தேதி 13/12/2024 வெள்ளிக்கிழமை பகல் 12.32 மணி வரை.**

விருச்சிகம்

## விருச்சிக ராசி அன்பர்களே...

செய்ய வேண்டிய பணிகளை யாரும் குறை சொல்ல முடியாத அளவிற்கு கச்சிதமான செய்து முடிப்பீர்கள் உத்யோகஸ்தர்கள் தங்கள் மேலதிகாரிகளின் தலைமையில் இருப்பவர்களின் சொந்த விஷயங்களில் தலையிடும் அளவிற்கு நெருக்கமாவீர்கள். நல்ல சம்பளமும் கிடைக்கும். வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்த புதிய புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விற்பனையை கூட்ட முயல்வர். அது தங்களுக்கு பலிக்கும். குடும்பத் தலைவிகள் தங்களின் கணவர் வழி உறவு முறைகளால் சிறிது நன்மையை எதிர்பார்க்கலாம். உடல் நிலை மிகவும் சோர்வாகவும் மந்தமாகவும் இருக்கும். கலைஞர்கள் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. நடிகர்கள் தங்கள் இயக்குனரிடம் வாக்குவாதம் செய்யாமல் அவர்கள் யோசனையை ஏற்று நடித்தால் தங்களுக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் கிடைக்கும். மாணவர்கள் நீண்ட நேரம் செல்போன்களை பயன்படுத்துவது, இரவில் நீண்ட நேரம் விழித்திருப்பதை தவிர்ப்பது நல்லது

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் கேதுபகவானை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: முருகன் காயத்ரி சொல்லுதல் | பரிகாரம்: சுப்பிரமணியருக்கு செவ்வாய் கிழமை அன்று ரோஜா மலர் மாலை அணிவித்து வழிபடுவது நல்லது. மனதில் மகிழ்ச்சி உண்டாகும். | சந்திராஷ்டமம்: கார்த்திகை மாதம் 30 ம் தேதி 15/12/2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.08 மணி முதல் மார்கழி மாதம் 2 ம் தேதி 17/12/2024 செவ்வாய்க்கிழமை இரவு 9.33மணி வரை**

தனுசு

## தனுசு ராசி அன்பர்களே...

தனுசு ராசி அன்பர்களே.. உடல் பலத்தை விட மனோ பலம் மிக்கவர் நீங்கள். எதிலும் நீங்கள் மன உறுதியுடன் இருந்து நினைத்ததை முடித்துக் காட்டுபவர். உத்யோகஸ்தர்கள் தங்களின் உயர் அதிகாரிகள் சொன்ன பணியை உடனுக்குடன் செய்து முடித்தால் தங்களுக்கு நல்ல மரியாதையும் அவர்களின் ஆதரவும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு கவலை வேண்டாம். தங்களின் சிறு தொழிலை விரிவாக்க தங்களுக்கு முதலீட்டுக்கு வங்கி கடன்கள் எளிதில் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அதற்குண்டான முயற்சியில் ஈடுபடுங்கள். குடும்பத் தலைவிகள், நகைகளை அடகு வைத்து பெற்ற கடனை இந்த மாதத்தில் ஒரு பகுதியை அடைத்து விடுவீர்கள். ஒரு சில நகைகளை மீட்கவும் வாய்ப்பு உள்ளது. கலைஞர்களுக்கு அடுத்த நிலை என்ற அளவிற்கு சம்பளம் கிடைக்கும். ஒரு சிலருக்கு கதாநாயகன், கதாநாயகி வாய்ப்பு அல்லது அதற்கு இணையான வாய்ப்பும் கிடைக்கும். மாணவர்கள் தங்கள் சக மாணவர்களுடன் வெளியில் செல்லும்செல்லும் போது கவனமுடன் இருப்பது நல்லது. வாகனம் ஓட்டும்போது வேகத்தை குறைப்பது நல்லது.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் விநாயகரை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: கணேஷர் காயத்ரி சொல்லுதல் | பரிகாரம்: வியாழக்கிழமை அன்று தஷிணா மூர்த்திக்கு மஞ்சள் மலர் மாலை அணிவித்து வழிபடுவது | சந்திராஷ்ட்டமம்: மார்கழி 2 ம் தேதி 17/12/2024 செவ்வாய்க்கிழமை இரவு 9.34 மணி முதல் மார்கழி 5ம் தேதி 20/12/2024 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.20 மணி வரை**

மகரம்

## மகர ராசி அன்பர்களே...

கள், இருக்கும் தொழிலை விட்டுவிட்டு தெரியாத தொழிலில் அனுபவமின்றி செயல்படாதீர்கள். தெரிந்த தொழிலை செய்யுங்கள். ஒரு நாள் முன்னேற்றம் அடையும். குடும்பத் தலைவிகளை பொருத்தவரை, வீட்டில் மாமியார்-மருமகள் உறவுகளில் பிரச்சினை ஏற்படும் என்பதால் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வீட்டில் இருந்து இருந்து கொண்டு செய்யும் தொழில்களான டைலரிங், பொம்மை தொழில் போன்ற சுயதொழிலை ஆரம்பக்கலாம். கலைஞர்களுக்கு படப்பிடிப்பு தாமதப்பட்டாலும் தங்களுக்கு நல்ல முக்கியமான கதாபாத்திரம் அமையும். தங்களின் பெயர் சொல்லும் வகையில் அது அமையும். காத்திருப்பது தவறல்ல

மாணவர்கள் ஆசிரியரை கேலி கிண்டல் செய்வதை தவிர்ப்பது நல்லது. மரியாதை கொடுப்பது நல்லது. அது தங்களின் எதிர்கால கேரக்டரை நிர்ணயிக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் புதன் பகவானை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: புதன் காயத்ரி சொல்லுதல் | பரிகாரம் : சனிக்கிழமை காயத்ரி மந்திரத்தை படித்து சனிபகவானை வணங்குவது நல்லது. | சந்திராஷ்ட்டமம்: மார்கழி மாதம் 5ம் தேதி 20/12/2024 வெள்ளிக் கிழமை அதிகாலை 5.21 மணி முதல் மார்கழி மாதம் 7ம் தேதி 22/12/2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.35 மணி வரை**

கும்பம்

## கும்ப ராசி அன்பர்களே...

மற்றவர்களுக்கு நல்லதே நினை, நல்லதே செய், நல்லதே நடக்கும் என்ற கொள்கையை போதிப்பவர் நீங்கள். அதன்படி தாங்கள் வாழ்ந்து காட்டுபவர். உத்யோகஸ்தர்களுக்கு உங்களுடன் வேலை பார்ப்பவர்களிடம் எந்த பாகுபாடுமின்றி இருப்பது தேவையற்ற பகையை ஒழிக்கும். ஏற்றத் தாழ்வினை பார்க்காமல் அவர்களுடன் சுமூகபழகி வருவதன் மூலம் பிரச்சினைகளி லிருந்து தப்பித்துக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு தொட்டதெல்லாம் பொன்னாகும் காலமாக இந்த மாதம் இருக்கும். வியாபாரம் சூடுபிடித்து அதில் அதிக லாபத்தினை பெறுவீர்கள். குடும்பத் தலைவிகள், தங்கள் கணவரின் உடல் நலனுக்காக பல விசயங்களை விட்டுக் கொடுப்பீர்கள். மாமியாரை மதித்து கணவனின் அன்பை பெறுவீர்கள். வீட்டினை கலைப் பொருட்களை கொண்டு அலங்கரிப்பீர்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளும் கதவைத் தட்டும். படம் முடிந்து இன்னும் திரைக்கு வராமல் இருப்பதால் கவலைப்படும் கலைஞர்களுக்கு இந்த மாதம் திரையிடும் தேதி அறிவிக்கப் படும். மாணவர்கள் விளையாட்டுத் தனத்தை கைவிட்டுவிட்டு தாங்கள் கல்வியில் கவனம் செலுத்தினால் அதிக மதிப்பெண் கள் பெறுவீர்கள். அது தங்கள் பெற்றோர்மகிழ்ச்சியைத் தரும். .

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் புதன் பகவானை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: புதன் காயத்ரி சொல்லுதல் | பரிகாரம்: பச்சை அம்மனுக்கு புதன்கிழமை அன்று மல்லிகை பூச்சரத்தை அணிவித்து தரிசனம் செய்வது நல்லது. | சந்திராஷ்டமம்: மார்கழி 7ம் தேதி 22/12/2024 ஞாயிற்றுக்கிழமை 3.36. மணி முதல் மார்கழி 10ம் தேதி 25/12/2024 புதன்கிழமை அதிகாலை 3.10 மணி வரை**

மீனம்

## மீன ராசி அன்பர்களே...

யாரிடமும் எதையும் எதிர்பார்க்காமல் இருந்தால் துன்பம் இல்லை என்ற வேதவாக்கினை கொண்டவர் நீங்கள்.

உத்யோகஸ்தர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும். கவனக்குறைவின்றி அதனை செய்தால் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்கலாம். வியாபாரிகளுக்கு பண நடமாட்டம் சற்றே கவலை தருமே என்றாலும் புதிய கடன்களைப் பெறாமல் ஏற்கனவே உள்ள சேமிப்புகளின் மூலம் சமாளித்துக் கொள்வீர்கள். பணியாளர்களை அரவணைத்துச் செல்லுங்கள். குடும்பத் தலைவிகள், வீட்டிற்குத் தேவையான சமையலறைப் பொருட்களை வாங்கிவிடுவர். தம்பதிகளிடையே ஒற்றுமை பலப்படும்.

கலைஞர்களில் ஒரு சிலருக்கு ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்து வாய்ப்புகள் கிடைக்கும் மாதமாக அமையும். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். கவலையை விடுங்கள். மாணவர்கள் ஆசிரியர்களிடம் தங்கள் சந்தேகங்களை கேட்க வெட்கப்பட வேண்டாம். அன்றன்றே சந்தேகத்தை தீர்த்துக் கொண்டால் தாங்கள் அதிக மதிப்பெண்களை பெற உதவும். பரிகாரம் சனிக்கிழமை அன்று லஷ்மி நரசிம்மருக்கு துளசி மாலை சாற்றி வணங்குவது நல்லது.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் குரு பகவானை வணங்கி வழிபடுங்கள் | ஸ்லோகம்: குரு காயத்ரி சொல்லுதல் | பரிகாரம் சனிக்கிழமை அன்று நரசிம்மருக்கு துளசி மாலை சாற்றி வணங்குவது மிக நல்லது. | சந்திராஷ்டமம்: மார்கழி 10ம் தேதி 25/12/2024 புதன்கிழமை அதிகாலை 3.11மணி முதல் மார்கழி 12ம் தேதி 27/12/2024 வெள்ளிக்கிழமை பகல் 2.34 மணி வரை**




### காரைக்குடியில் உலக சைபர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு

# பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சைபர் கிரைம் குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு

உலக சைபர் பாதுகாப்பு தினத்தை (03.12.24) முன்னிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டோங்கரே பீரவீன் உமேஷ், IPS. அவர்கள் உத்தரவின் பேரில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்) திரு.கலைச்செல்வன் மற்றும் காரைக்குடி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.பார்த்திபன் அவர்களின் மேற்பார்வையில் சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் திரு.சந்திரமோகன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.முருகானந்தம் அவர்கள் தலைமையில் காரைக்குடி நகர் பகுதியில் மகளிர் சுய உதவி குழுவினருடன் இணைந்து விழிப்புணர்வு பேரணி மற்றும் காரைக்குடி செல்லப்பா வித்யா மந்திர் இன்டர்நேஷனல் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சைபர் கிரைம் குற்றங்கள் குறித்து எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.






# சங்கத்தமிழ் நூல்களை நமக்கு மீட்டுத் தந்த பனை மரம்

## பனைகளும் வகைகளும் அவை நமக்கு தரும் உணவுகள், அதன் பயன்கள் அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றை காணலாம்

தமிழகத்தின் மாநில மரம் பனை. புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினம். தமிழ்நாட்டின் கால நிலையை ஒத்த மிதவெப்ப மண்டல பகுதிகளில் வளரும் தன்மையுள்ள பனை, குறைந்தது 60 வருடங்களுக்கு மேல் வாழும். வேர் முதல் நுனி வரை பனையின் ஒவ்வொரு பகுதியும் நமக்கு பல பயனுள்ள பயன்களைத் தருகின்றது.

மிக நீளமான உறுதியான சல்லி வேர் தொகுப்பை இது பெற்றிருப்பதால் மண் அரிப்பைத் தடுக்கும் இயற்கை அரணாக நம் முன்னோர் இதனை வயல் வரப்புகளிலும் குளம் கால்வாய்கள், ஆற்றுப்படுகைகளிலும் கடலை ஒட்டிய பகுதிகளிலும் வளர்த்தனர். இடத்தின் எல்லைகளைக் குறிக்கவும் வயல்களிலும் தோட்டங்களிலும் நட்டனர்.

கரும் பாறையைப் போன்ற உறுதியான பனையின் தண்டுப்பகுதி குடிசை மற்றும் ஓட்டு வீடுகளில் பனங் கையாகவும் பனம் வரிச்சலாகவும் சிறு கால்வாய்கள், வாய்க்கால்களைக் கடக்க உதவும் மரப்பாலமாகவும் பயன்படுகிறது.

பல சங்க இலக்கிய நூல்கள் கிடைக்கப் பெற்றது ஓலைச்சுவடி என்று சிறப்பித்து கூறும் பனை ஓலையால்தான்.

திருவள்ளுவர் என்றதும் நம் நினைவில் தோன்றுவது ஓலைச்சுவடியும் எழுத்தாணியும் ஏந்திய திருவள்ளுவரைத்தான். ஒரு வேளை பனை இல்லை என்றால் சங்கத்தமிழ் நூல்களும் பல வரலாற்றுக் குறிப்புகளும் நமக்கு கிடைக்காமலேகூட போயிருக்கலாம்.

## பனை மரத்தில் மொத்தம் 35 வகை இருக்கின்றன. அவை,

1. ஆண் பனை
2. பெண் பனை
3. கூந்தப்பனை
4. தாளிப்பனை
5. குமுதிப்பனை
6. சாற்றுப்பனை
7. ஈச்சம்பனை
8. ஈழப்பனை
9. சீமைப்பனை
10. ஆதம்பனை
11. திப்பிலிப்பனை
12. உடலற்பனை
13. கிச்சிலிப்பனை
14. குடைப்பனை
15. இளம்பனை
16. கூறைப்பனை
17. இடுக்குப்பனை
18. தாதம்பனை
19. காந்தம்பனை
20. பாக்குப்பனை
21. ஈரம்பனை
22. சீனப்பனை
23. குண்டுப்பனை
24. அலாம்பனை
25. கொண்டைப்பனை
26. ஏரிலைப்பனை
27. ஏசறுப்பனை
28. காட்டுப்பனை
29. கதலிப்பனை
30. வலியப்பனை
31. வாதப்பனை
32. அலகுப்பனை
33. நிலப்பனை
34. சனம்பனை
35. செம்பனை



## பனை தரும் பயன்கள், உணவு பொருட்கள்:

நுங்கு, பனம் பழம், பூரான், பனாட்டு, பாணிப்பனாட்டு, பனங்காய், பனங்கள்ளு, பனஞ்சாராயம், வினாகிரி, பதநீர், பனங்கருப்பட்டி, பனைவெல்லம், சில்லுக் கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனஞ்சீனி, பனங்கிழங்கு, ஒடியல், ஒடியல் புட்டு, ஒடியல் கூழ், புழுக்கொடியல், முதிர்ந்த ஓலை, பனை குருத்து.

**உணவுப்பொருள் அல்லாதவை:**

பனை ஓலைச் சுவடிகள், பனை ஓலைத் தொப்பி, குருத்தோலை,

**வீட்டுப்பயன்பாட்டுப் பொருட்கள்:**

பனையோலை, நீற்றுப் பெட்டி, கடகம், பனைப்பாய், கூரை வேய்தல், வேலியடைத்தல், பனைப்பாய், பாயின் பின்னல், பனையோலைப் பெட்டி.

**விவசாயப் பயன்பாட்டுப் பொருட்கள்:**

கிணற்றுப் பட்டை, எரு, துலா,

**அலங்காரப் பொருட்கள்:**

பனம் மட்டை, வேலியடைத்தல், நார்ப் பொருட்கள், தட்டிகள் பின்னல்

**வேறு பயன்பாடுகள்:**

கங்குமட்டை, தும்புப் பொருட்கள், விறகு, மரம்.

**கட்டிடப்பொருட்கள்:**


தளபாடங்கள், பனம் விதை, எரிபொருள்.

**உணவுப் பொருட்கள் :**

பனங்கருப்பட்டி, பனைவெல்லம், சில்லுகருப்பட்டி, சுக்கு கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனஞ்சக்கரை, பனங்கிழங்கு மாவு, பனங்கிழங்கு சத்துமாவு, பதநீர், பனம்பழம் ஜூஸ், பனை விதை, பனங்கன்று, பனங்கிழங்கு, பனைப்பாய், புழுக்கொடியல், ஒடியல்.













# வரம்பு மிகுந்த கந்து வட்டி தடுப்புச் சட்டம் 2003

## *Prohibition of Charging Extrabitant Intrest Act 2003*



**சட்ட எண் - 38/2003 காரண விளக்கவுரை**

தின வட்டி, மணிநேர வட்டி, கந்து வட்டி, மீட்டர் வட்டி மற்றும் தண்டல் போன்ற வரன்முறை இல்லா வட்டி, எவரேனும் நபரால் விதிக்கப்பட்டு, பொதுமக்கள் அதற்கு இரையாகி பொதுமக்கள் கடுந்துயர்படுவதை நீக்கும் பொருட்டு, அவ்வாறான நபர் அவ்வாறான வரம்பு மிகுந்த கந்து வட்டிக்கு பணம் கொடுத்தலை தடை செய்திடவும், அதற்கு கடும் தண்டனைக்கு வகை செய்திடவும், அரசானது இந்நோக்கத்திற்கிணங்க புது சட்டம் இயற்றிட முடிவு செய்கிறது.

**பொருள் வரையறைகள்: (பிரிவு 2)**

(1) ''தினவட்டி'' எனில் நாள் தோறுமான வட்டி கணக்கிடப்படுகையில், 1957ஆம் ஆண்டு த.நா. பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியைவிட கூடுதலானாது எனப் பொருள்படும்.

(2) "கடனாளி" என்பவர் வரம்பு மிகுந்த கந்து வட்டிக்கு கடன் பெறும் நபர் எனப் பொருள் படும்.

(3) ''வரம்பு மிகுந்த கந்து வட்டி" என்பதில் தினவட்டி, மணிநேர வட்டி, கந்து வட்டி, மீட்டர் வட்டி மற்றும் தண்டல் உள்ளடங்கியதாக பொருள்படும்.

(4) ''மணிநேர வட்டி" எனில் மணிக்கணக்கில் வட்டி, கணக்கிடப்படுகையில் 1957 ஆம் ஆண்டு பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விடக் கூடுதலானது எனப் பொருள்படும்.

(5) ''கந்து வட்டி'' எனில் வட்டியானது கணக்கிடப்படுகையில் 1957 ஆம் ஆண்டு பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விடக் கூடுதலானது எனப் பொருள்படும்.

(6) ''கடன்'' எனில் தினவட்டி, மணிநேர வட்டி, கந்துவட்டி, மீட்டர் வட்டி அல்லது தண்டலுக்கு கொடுக்கப்படும் முன்பணத் தொகை எனப் பொருள்படும்.

(7) ''மீட்டர் வட்டி'' எனில் வட்டியானது கணக்கிடப்படுகையில், கடன் தொகை குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்கப்படாத ஒவ்வொரு நாளும் வட்டியானது கணக்கிடப்படுகையில் 1957 ஆம் ஆண்டு பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விடக் கூடுதலானது எனப் பொருள்படும்.

(8) ''தண்டல்'' என்பது கடன் தொகை பகுதியுடன் வட்டியும் தினம் வசூலிக்கப்பட்டு, வட்டியானது 1957 ஆம் ஆண்டு பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விடக் கூடுதலானது எனப் பொருள்படும்.

(9) இச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், 1957 ஆம் ஆண்டு த.நா. பணம் கொடுப்போர் சட்டத்தில் அதற்கென உள்ள பொருளையே கொண்டிருக்கும்.

**வரம்பு மிகுந்த கந்து வட்டி விதிப்பதை தடை செய்தல் - (பிரிவு 3)**

நபர் எவரேனும் அவரால் கொடுக்கப்பட்ட கடன் தொகைக்கு வரம்பு மிகுந்த கந்து வட்டி விதிக்கலாகாது.

**தண்டனை (பிரிவு 4) Penalty**

1957 ஆம் ஆண்டு த.நா.கடன் கொடுப்போர் சட்டத்தில் கண்டுள்ளது எது எவ்வாறு இருப்பினும், எவரொருவர் பிரிவு 3ன் காப்புரைகளை மீறுவாராயின் அல்லது கடன் தொகையினை வசூல் செய்திட எவரேனும் கடனாளியை தொந்திரவு அல்லது தொந்திரவு செய்திட உடந்தையாக இருப்பாராயின், 3 ஆண்டுகள் வரையான காலத்திற்கு நீடிக்கத்தக்க சிறைத் தண்டனையுடன் மற்றும் ரூ.30,000 வரை நீடிக்கத்தக்க அபராதமும் விதித்து தண்டிக்கப்படத்தக் கவராவர்.



**நீதிமன்றத்தில் பணம் வைப்பீடு செய்தல் மனுதாக்கல் மற்றும் நடைமுறை: (பிரிவு 5)**
**Deposit of Money and presentation of Petition to the Court and the Procedure thereof**

(1) எவரேனும் நபரிடமிருந்து கடனாளி தான் பெற்ற கடன் தொகையினைப் பொறுத்து, 1957 ஆம் ஆண்டு த.நா. பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7ல் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டித் தொகையுடன் பணத்தினை, ஆள்வரை கொண்ட நீதிமன்றத்தில், முழு அல்லது பகுதி கடன் மற்றும் அதற்கான வட்டி நேர்விற்கேற்ப, பதிவு செய்யும் வகையிலான மனுவுடன், வைப்பீடு செய்திடலாம்.

(2) நீதிமன்றமானது உட்பிரிவு (1)ன் கீழ் மனு வரப்பெற்றவுடன், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு பிரதியை அனுப்பி, நீதிமன்றத்தால் வழங்கப்படக்கூடியவாறான 15 நாட்களுக்குள் வழக்கிற்கான தனது கூற்றினை அளிக்குமாறு நெறியுறுத்திடும். நீதிமன்றமானது, விசாரணைக்குப் பின்னர் மற்றும் தரப்பினர்களின் கூற்றுகளை பரிசீலனை செய்த பின்னர், கடன் தொகை முழு அல்லது பகுதி மற்றும் வட்டி நேர்விற்கேற்ப உளநிறைவு பதிவுடன் ஆணைகளை பிறப்பிக்கும்.

**சொத்து உடைமையினை மீட்டல்: (பிரிவு6)**
**Restoration of Possession of Property**

நீதிமன்றமானது, கடனாளி மனு தாக்கல் செய்ததின் பேரில், கடன் தொகை அல்லது அதற்கான வட்டிக்கு எவரேனும் நபரால் வலுவந்தமாக எடுத்துக்கொள்ள அசையும் அல்லது அசையா சொத்தின் உடைமையினை மீட்பதற்கு உத்திரவு பிறப்பிக்கலாம்.

**தன்னிச்சையாக வெளிப்படுத்துதல் : (பிரிவு 7)**
**Voluntary Disclosure**

இந்த அவசரச் சட்டம் த.நா. அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு திங்களுக்குள், வரம்பு மிகுந்த கந்து வட்டி விதிக்கும் நபர் எவரும், தான் கொடுத்த கடன் தொகைக்கு, 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணம் கொடுப்போர் சட்டம் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியினை விதிக்க உள்ள தமது எண்ணத்தினை, நீதி மன்றத்தின் முன்னான மனுவில் வெளிப்படுத்தினால் அவ்வாறான வெளிப்படுத்தலின் பேரில் அவ்வாறான கடன் தொகைக்கு அரசினால் 1957ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்படும் மற்றும் அவ்வாறான கடன் பொறுத்து இந்த அவசரச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு குற்றவழக்கு தொடரப்படாது.

**வட்டியினை சரிகட்டல்: (பிரிவு 8)**
**Adjustment of Interest**

கடன் தொகையினை வட்டியுடன் தீர்வு செய்திட வேண்டி கடனாளியால் தாக்கல் செய்யப்படும் மனுவின் பேரில், த.நா. பணம் கடன் கொடுப்போர் சட்டம் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டிக்கு மேல் கொடுக்கப்பட்ட தொகையினை, கடன் தொகைக்கு சரிகட்ட உத்திரவு பிறப்பிக்கலாம்.

**தற்கொலைக்கு உடந்தை: (பிரிவு 9)**
**Abetment of suicide**

கடனாளி அல்லது அவரது குடும்ப உறுப்பினர் தற்கொலை செய்து கொள்கிறவிடத்து மற்றும் அவ்வாறான தற்கொலைக்கு உடன் முன்னர் கடனாளி அல்லது அவரது குடும்ப உறுப்பினர் எவரேனும், யாதொரு நபரால் தொந்திரவு செய்யப்பட்டிருப்பின், மாறாக மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, கடன் கொடுத்த நபர், அவ்வாறான தற்கொலைக்கு உடந்தையாக கருதப்படுவார்.

விளக்கம்: இப்பிரிவின் நோக்கத்திற்கிணங்க "குடும்ப உறுப்பினர்" எனில், வாழ்கைத்துணை, மணமாகாத மகள் அல்லது மணமாகாத மகன் எனப் பொருள்படும்.

**அவசரச் சட்டம் பிற சட்டங்களை குறைவுறச் செய்திடாது: (பிரிவு 11)**
**Act not to be in derogation to other laws**

இந்த சட்டத்தின் கீழான குற்றங்களைப் பொறுத்து, 1957 ஆம் ஆண்டு த.நா. கடன் கொடுப்போர் சட்டம் பிரிவு 12ன் காப்புரைகள் பொருந்தாது. இச்சட்டத்தின் காப்புரைகள் தற்போது செல்லாற்றலிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் காப்புரைகளுக்கு கூடுதலாக இருக்குமேயன்றி, குறைவுறச் செய்திடாது.

**1957ஆம் ஆண்டு தமிழ்நாடு பணம் கொடுப்போர் சட்டத்தின் காப்புரைகள் பொருந்துகை: (பிரிவு 12)**

இச்சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, 1957ஆம் ஆண்டு தமிழ்நாடு கொடுப்போர் சட்டத்தின் காப்புரைகள் பணம் கொடுப்போர்க்கு, வேண்டிய மாறுதல்களுடன், இந்த சட்டம் பிரிவு 3ல் குறிப்பிடப்பெற்ற நபருக்குப் பொருந்துவனவாகும்.

விளக்கம்: நபர் ஒருவரின் செய்கை இந்த சட்டத்தின் கீழ் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு. பணம் கொடுப்போர் சட்டத்தின் கீழும் குற்றமாக அமைகிறவிடத்து, இந்த சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடரப்படும்.

**-K.T.சிவக்குமார்** BA.,BL.
Cell: 94432 73773

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**






'போலீஸ் பார்வை' மதுரை சிறப்பு நிருபர் J.பீமராஜின் கார்ப்பரேட் அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்த ஆசிரியர் மற்றும் பதிப்பாளர் Dr.N.பாலகிருஷ்ணன், முதன்மை ஆசிரியர் KT.சிவக்குமார், கோவில்பட்டி நிருபர் V.முருகேசன்.



தேனி எரசை கருட சித்தர் ஆசிரமம் சென்று கருட சித்தர் சுவாமிகளிடம் ஆசி பெற்ற தருணம்.

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore





–::: தொடர்புக்கு :::–

**786 78 28 203, 638 298 5562**


4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO